# வைகை




T.N. நாகலிங்கம் & கம்பெனி
புதுமண்டபம், மதுரை.

# ஔவையை

ஆசிரியர் :
டாக்டர் மா. இராசமாணிக்கனார்,
M.A., L.T., M.O.L., PH.D.
தமிழ்த் துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

[Paper used : 24 lbs. White Printing]

வெளியிடுவோர் :
A. T. N. நாகலிங்கம் & கம்பெனி
புதுமண்டபம், மதுரை.

உரிமை பதிவு செய்யப்பட்டது

விலை ரூ. 0-15-0

முதற் பதிப்பு—செப்டம்பர், 1955
இரண்டாம் பதிப்பு—மே, 1956
மூன்றாம் பதிப்பு—1957

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Fort St. George Gazette dated 4-4-1956,
Supplement to Part I-B, Page 23]

Kabeer Printing Works, Madras (3507)

# முகவுரை

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுல"கத்துப் பெரிய ஆறுகளுள் காவிரி, வையை, பொருநை என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றுள் காவிரி சோழ நாட்டை வளப்படுத்து கின்றது. பின்னவை இரண்டும் பாண்டிய நாட்டை வளப்படுத்துகின்றன. இப்பின்னவை இரண்டி னும் வையையாறே பண்டைத் தமிழ் நூல்களில் மிகவும் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது. தென் கரையில் பாண்டியர் கோநகரமான மதுரை அமைந்துள்ள காரணத்தால் இதன் பெருமை மிகுவ தாயிற்று. இது மதுரை மாவட்டத்தில் தோன்றிப் பல துணையாறுகளுடன் அளவில் விரிந்து பாய்ந்து இராமநாதபுர மாவட்டத்தில் முடிவு பெறுகிறது.

இப்பேரியாற்றின் பண்டைச் சிறப்பும், இன்றைய நிலையும், இதன்கண் அமைந்துள்ள சிற்றூர்கள், பேரூர்கள் பற்றிய விவரங்களும், இவ் யாற்றங்கரையில் அமைந்து பாண்டியர் கோநகர மான மதுரையின் சிறப்பும், அங்குத் தோன்றி வளர்ந்த அரசியல், சமயம், கலைகள் முதலியவை பற்றிய செய்திகளும், நாகரிக வளர்ச்சியும் இந் நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

பண்டைத் தமிழ் நூல்களையும், கல்வெட்டுகளை யும், இன்றைய ஆராய்ச்சி நூல்களையும், வையை பற்றிய அரசாங்க வெளியீடுகளையும் துணையாகக் கொண்டு வரையப் பெற்ற இந்நூல், உயர்நிலைப் பள்ளி மாணவர்க்குரியது. தமிழ் மாணவர் தமிழ் வையையின் வரலாற்றினை அறிந்து மகிழ்வார் களாக!

இந்நூலினைச் சிறந்த முறையில் வெளியிட்ட மதுரை A. T. N. நாகலிங்கம் அண்டு கம்பெனி யாருக்கு எனது நன்றி உரியதாகுக!

ஆசிரியர்

# உள்ளுறை

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நீரும் உலகமும் | ... | 1 |
| 2. | பெரியாற்று நீர்த்தேக்கம் | ... | 8 |
| 3. | வையையின் தோற்றமும் போக்கும் | ... | 16 |
| 4. | இலக்கியத்தில் வையை | ... | 28 |
| 5. | வையைக்கரை ஊர்கள் | ... | 53 |
| 6. | மதுரை மாநகரம் | ... | 58 |
| 7. | வையைக்கரை நாகரிகம் | ... | 82 |

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001

# 1. நீரும் உலகமும்

## வான் சிறப்பு

"மழை பெய்வதால் உலகம் வாழ்ந்து வருகின்றது. எனவே, மழை உலகத்து உயிர்களுக்கு அமிழ்தம் என்று கூறலாம். உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருளை விளைவித்துத் தருவதோடு, பருகுவார்க்கு உணவாகவும் மழை உதவுகின்றது. மழை பொய்ப்பின், கடல்சூழ்ந்த அகன்ற உலகமாயினும், பசி உயிர்களை வருத்தும். மழையில்லையேல் உழவர்கள் வேலையற்றுச் சோம்பித் திரிவர். மழை பெய்யாது பொய்த்துக் கெடுக்கும் ஆற்றல் உடையது; பெய்து, வளம் இழந்த பகுதிகளை வளமுடையதாகச் செய்யும் ஆற்றலும் உடையது. வானத்திலிருந்து மழைத்துளி விழாவிடில், உலகில் பசும்புல்லையும் காணுதல் இயலாது. மழை இல்லையேல், வானோர்க்கென நடக்கும் விழாக்களும் நாட்பூசனைகளும் நடைபெறா ; தானம், தவம் என்ற இரண்டும் இல்லாது போகும். சுருங்கக் கூறின், நீரின்றேல் உலகில்லை ; ஒழுக்கமுமில்லை". இது நமக்குத் தமிழ்மறை தந்த திருவள்ளுவர் வாக்கு.*

இங்ஙனம் பல்லாற்றானும் இன்றியமையாததாய் அமைந்த மழையினைப் பற்றிக் கூறிய வள்ளுவர், ஆறுகளின் சிறப்பையும் கூறுகின்றார்.

* திருக்குறள் வான்சிறப்பு

## ஆறுகளும் தமிழ் மறையும்

திருவள்ளுவர் பொருட்பாலுள் 'நாடு' என்னும் அதிகாரத்துள், நாட்டிற்குரிய உறுப்பென்று கூறும் நான்கனுள் 'ஆறும் ஒன்ருகும்' என்று கூறியுள்ளார்.

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்(கு) உறுப்பு." —(குறள்-737)

ஊற்றும் மழையுமாகிய இருவகை நீர்வளமும், தகுந்த முறையில் அமைந்த மலையும், அந்த மலையிலிருந்து ஆருக வரும் நீர்வளமும் வலிய அரணும் நாட்டிற்கு உறுப்புக்களாகும் என்பதுதான் இக்குறட்பாவின் பொருள்.

நாட்டிற்கு உரிய உறுப்புக்களுள் யாறும் ஒன்றெனக் கூறிய வள்ளுவர், நாட்டிற்கு உரிய அரண்களுள் யாறும் ஒன்றெனக் கூறுகின்ருர்.

'மணிபோல் தெளிந்த நீரும், பரந்த நிலமும், மலையும், அழகிய நிழலையுடைய காடும் ஆகிய இவை நான்கும் ஒரு நாட்டின் அரண்களாகும்.'

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்." —(குறள்-742)

## மாமழை போற்றுதும்

இங்ஙனம் உலக வளர்ச்சிக்கும் வளத்திற்கும் நீரே அடிப்படைக் காரணமாக உள்ளதால்தான் நீரைத் தெய்வமாகப் போற்றும் மனப்பான்மை மக்களிடை வளர்ந்துவந்தது.

"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற்(கு) அவன்அளிபோல்
மேல்நின்று தான்சுரத்த லான்."

என்று சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடி

கள் கூறியுள்ளதும் மக்கள் நீரைத் தெய்வமாக எண்ணிப் போற்றினர் என்பதற்குத் தக்க சான்ருகும்.

## அந்த நாள்

'ஏன் வாழவேண்டும்'?, 'எப்படி வாழ வேண்டும்'? என்று அறிவுக்கு வேலை தந்து உணர்வோடு வாழும் நாம், நம்முடைய இன்றைய உயர் நிலைக்கு முதல் நாளாய் அமைந்த 'அந்த நாளை'ப் பற்றி அறிய வேண்டாவோ? உடலுழைப்பே இல்லாமல் மின்சாரத்தின் உதவியாலேயே வளமாக வாழலாம் என்று இறுமாந்து கூறும் இன்றைய மனிதன், பண்டைக்காலத்தில் வாழ்ந்த வாழ்க்கையை உணரவேண்டுவது அவசியமாகும்.

பழைய மனிதன் குகைகளில் தங்கி, கனிகளை உண்டு, தழைகளை உடுத்து வாழ்ந்தான். பேச அறியாத அவன் கைகளை அசைத்துப் பேசினன்; நாளடைவில் கைகளை அசைத்துப் பேசுவதை நிறுத்திக் குறியீடுகள் மூலம் பேசலானன். குகைகளில் வாழ்ந்த மனிதன் ஓரளவு சிந்திக்கும் ஆற்றலும் பெற்ருன். தன் வாழ்க்கைக்குரிய வேலையாக அவன் கொண்டிருந்த தொழில் ஆடுமாடுகளை மேய்த்தலேயாகும். தொடக்கத்தில் ஆடுமாடுகளை மேய்த்த பகுதி வரண்டு போனமை கண்ட அவன், வளமான பகுதிக்குச் செல்ல விரும்பினன். அங்ஙனம் சென்றவன், நீர் திரண்டுவந்த ஆற்றினைக் கண்டான்; ஆற்றை அடுத்த புல்வெளிகளைப் பார்த்தான்; தன்னிடம் இருந்த ஆடுமாடுகள் மேயத் தகுந்த இடம் அதுவே என்று எண்ணி மகிழ்ந்தான்; அதனைத் தன் நிலையான வாழ்விட

மாகக் கொண்டான். இங்ஙனம் பண்டை மனிதன் ஆற்றங்கரைப் பகுதிகளைத் தன் நிலையான வாழ்விடமாகக் கொண்ட அன்றே **நாகரிகம்** கால் கொள்ளலாயிற்று என்னலாம்.

## உழவுக்கலை

ஆற்றினை அடுத்து வாழத் தொடங்கிய பண்டை மனிதன், மனிதரது முயற்சியின்றியே விளையும் செடிகொடிகளைக் கண்டு வியந்தான்; பறவைகளாலும் காற்றாலும் நீராலும் கொணரப்பட்டுத் தூவப்படும் விதைகள் யாருடைய துணையும் இல்லாது விளைவதைக் கண்டான். பின்னர், மண்ணைத் தோண்டிச் சில விதைகளை அதனில் வைத்து, நீரிட்டுக் கவலையுடன் காத்துவந்தான்; அவை விளைந்து பயன் தந்தமை கண்டு மகிழ்ந்தான். இம்முறையில் தோற்றம் கொண்டதுதான் **உழவுக்கலை.**

## நாகரிகத்தின் பிறப்பிடம்

பழைய மனிதனது புதிய வாழ்விடமாக அமைந்த ஆற்றங்கரையே உலக வளர்ச்சிக்கான உணவையும் அளித்தது. ‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’ என்னும் நல்லுரைக்கேற்ப, உணவு அளித்த ஆற்றுப்பகுதிகளே நாகரிகத்தின் பிறப்பிடமாகக் கருதப்படுகின்றன. எகிப்து நாட்டில் உள்ள நைல் என்னும் ஆறு பாயும் பகுதிகளிலேயே நாகரிகம் முதன் முதலாகத் தோற்றம் கொண்டிருக்கலாம் என்று அறிஞர் கருதுகின்றனர்.

## கலைகளின் தாயகம்

ஆற்றுப் பகுதிகள் எவ்வாறு உழவுக்கலையின் பிறப்பிடமாக அமைந்தனவோ, அவ்வாறே அவை பலவகைக் கலைகளின் தாயகமாக விளங்கின. மரங்களிலும் குகைகளிலும் வாழ்ந்த முதல் மனிதன், அவைகளை விட்டு ஆற்றுப் பகுதிகளில் வாழத் தொடங்கியது முதல் வசதியுடனும் தற்காப்புடனும் வாழ விரும்பினான். இந்த விருப்பத்தின் விளைவாக அமைந்தவையே குடிசை வீடுகள். பண்டை மனிதன் களிமண்ணால் சுவரை எழுப்பிக் குடிசை அமைத்து வாழ்வதினும், செங்கற்களால் வீடுகட்டி வாழ்தல் நல்லதென்று எண்ணினான்; ஆற்றை அடுத்த பள்ளத்தாக்குகளில் மிகுந்த அளவில் களிமண் இருப்பதைக் கண்டான்; நாற்சதுர அமைப்பில் களிமண்ணைக் கொண்டு கற்களை உருவாக்கிச் சூரிய வெப்பத்தால் வலியதாக்கினான். இம்முறையிற்றான் மட்பாண்டங்கள் செய்வதும் செங்கற்கள் செய்வதுமாகிய இரு கலைகளும் தோற்றம் கொண்டன. ஆற்றுப் பகுதிகளில் வாழ்ந்த மனிதர்களின் முயற்சியால் தோற்றம் கொண்டவையே நூல் நூற்றல், ஆடை நெய்தல், தையல் ஆகிய கலைகள். இதுகாறும் நாம் கண்டவற்றால், உலக நாகரிகமே ஆற்றங்கரைப் பகுதிகளில்தான் தோற்றம் கொண்டதென உறுதியாகக் கூறலாம்.

## நீரும் நிலமும்

பாண்டிய மன்னருட் சிறந்தவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். குடபுலவியனார் என்பவர் பைந்தமிழ்ப் புலவர். இவர் நீர்

நிலையின் இன்றியமையாமையைப் பற்றிப் பாண்டியனிடம் கீழ்வருமாறு கூறுகின்றார் :

"அரசே ! நீ மறுமையின் இன்பத்தை விரும்பினாலும், இப்பிறவியில் ஒரு பேரரசனாய்ப் புகழெய்த விரும்பினாலும், நின்புகழ் என்றும் நின்று நிலவுதல் வேண்டும் என்று விரும்பினாலும் நீர் நிலைகளைப் பெருகச் செய்தல் வேண்டும். உணவை முதலாகக் கொண்ட, உணவால் உளதாகிய உடலுக்கு உண்டி கொடுத்தோரை உயிர் கொடுத்தோராக உலகம் எண்ணிப் போற்றும். அவ்வாறு போற்றுதற்குரிய உணவோ, நீரையும் நிலத்தையுமல்லவா அடிப் படையாகக் கொண்டது ! நீரையும் நிலத்தையும் நன்கு கவனிப்பவரை அல்லவா உடம்பையும் உயிரையும் தந்தவராக உலகம் கருதும் ! எனவே, மன்னவ, நீ நிலம் குழிந்த இடங்களில் நீர் நிலைகளை அமைப்பாயாக."

இவ்வாறு குடபுலவியனார் கூறியுள்ளமை நீர் நிலைகளின் இன்றியமையாமையையும் சிறப்பையும் விளக்குவதாகும்.

## தமிழ் நாட்டு ஆறுகள்

இங்ஙனம் பல வகைகளிலும் சிறந்து, மக்கள் வாழ்க்கைக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் அடிப் படைக் காரணமாய் விளங்கும் ஆறுகளில், தமிழ் நாட்டில் பாய்ந்து தம் நீர்வளத்தால் வரண்ட பகுதிகளையும் வளமுள்ள பகுதிகளாகச் செய்வன பாலாறு, பெண்ணை, வையை, காவிரி, தாமிர வருணி என்பனவாம். இவ்யாறுகளுள் வையையும் காவிரியுமே குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவை. வையையாற்றின் கரையில் அமைந்துள்ள மதுரை

யம்பதிதான் தமிழ் வளர்ச்சிக்கே தாயகமாக இருந்தது. காவிரியோ கங்கையாற்றைப் போன்று உயிராருக விளங்குகின்றது.

## வையையின் மாண்பு

வையையாறு தமிழ் நாட்டை வளமுறச் செய்த ஆறுகளுள் ஒன்று என்பதை நன்குணர்த்தவே புதுமைக் கவிஞரான **பாரதியார்,**

"காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருநை நதி—என
மேவிய யாறு பலவோடத்திரு
மேனி செழித்த தமிழ்நாடு."

என்று பாடியுள்ளார்.

இங்ஙனம் பாராட்டுப் பெற்று நமது தமிழகத்திற் பாயும் வளம் கொண்ட வையை யாற்றின் வரலாற்றைத் தமிழராகவுள்ள நாம் அறிதல் வேண்டும் அல்லவா? வையையின் தோற்றம், போக்கு, பயன் முதலியவற்றை அறிந்துகொள்வது, அவ்யாற்றின் துணையைக் கொண்டு நாட்டின் வளத்தை மேலும் எவ்வாறு பெருக்கலாம் என்னும் புதிய எண்ணத்திற்கு வழிகாட்டியாய் அமையும். புதிய எண்ணம் செயலாக உருக்கொள்ளின், தமிழ் நாடு வளமிகுந்த நாடுகளுள் ஒன்ருக விளங்க வசதி உண்டாகும் அன்ருே?

# 2. பெரியாற்று நீர்த்தேக்கம்

**அணைக்கட்டுகள்**

ஆற்றின் குறுக்கே கல்லால் அணைகட்டி நீரைத் தேக்கிப் பெரும்பயன் பெறலாம். மழையின் மிகுதியால் கரை புரண்டோடும் நீரைத் தேக்கவும், எவ்விதப் பயனுமில்லாது மலையில் தோன்றிக் கடலில் கலக்குமளவில் உள்ள ஆற்றின் நீரைப் பயன்படுத்திக்கொள்ளவும் அணைக்கட்டுகள் பயன்படுகின்றன. பயனில்லாது போகும் நீரைத் தேக்கி, அதனுல் தேக்கமுறும் நீரைக் கால்வாய்கள் வழியாக வயல்களுக்குப் பாய்ச்சி, விளைவைப் பெருக்கும் முறையால் ஒரு நாட்டின் பொருளாதார நிலை உயரும். இவ்வாறு அணை கட்டி நீரைத் தேக்கி வளம்பெருக்கும் முறை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே கையாளப் பட்டுள்ளது.

வையை யாற்றில் புரண்டோடிய வெள்ளத்தைத் தடைசெய்ய மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டையை அடுத்த அணைப்பட்டியில் பண்டைக் காலத்தில் அணை ஒன்று கட்டப்பட்டிருந்தது. காவிரியாற்றிலும் பெரிய அணைகளைச் சோழ மன்னர்கள் கட்டி முடித்தார்கள் என்பதை இலக்கியம் உணர்த்த உணர்கிறேம். உலக நாடுகளில் செல்வ வளத்தில் சிறந்து விளங்கும் அமெரிக்காவில் உள்ள போல்டர் அணைக்கட்டும், நாகரிகத்தின் பிறப்பிடங்களுள் ஒன்ருன நைல் நதியின் குறுக்கேயுள்ள சென்ஞர் அணைக்கட்டும், சிந்து ஆற்றின் குறுக்கேயுள்ள சுக்கூர் அணைக்கட்டும் இன்று உலகப்புகழ் பெற்றவையாக இருக்கின்றன.

## வாய்க்கால்

'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்பது பழமொழி. அணையிலிருந்து அல்லது ஆற்றிலிருந்து வாய்க்கால்கள் வெட்டப்படும். வாய்க்கால்கள் வாயிலாக நீர் நிலத்துக்குக் கொண்டு செல்லப்படும். நீர் தேங்காமல் ஓடுவதற்குரிய வகை கண்டு கரை அமைத்தல் வேண்டும். பண்டைக் காலத்தில் வாய்க்கால்களை வெட்டிப் பயன்பெறுவதில் மன்னனும் மக்களும் கவலை செலுத்தினர். வெட்டப்பட்ட வாய்க்கால்கள் ஊர்ப் பெயராலும், மன்னர்கள் பெயராலும், கடவுளர்கள் பெயராலும் வழங்குதல் மரபு. வீதிவிடங்கன் வாய்க்கால், இராசராசன் வாய்க்கால், வைரமேகன் வாய்க்கால் முதலியன கல்வெட்டுகளிற் காணப்படுகின்றன.

## பெரியாறு—மாற்றம்

மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடரில் உற்பத்தியாகித் திருவாங்கூர்ச் சீமையின் பேரியாறாக விளங்குவதுதான் பெரியாறு. இவ்யாறு மழை வளம் மிகுந்த பகுதியில் பாய்ந்தது. சங்க காலத்தில் இப் பேரியாறு மேற்கே சென்று சேர நாட்டிற் பாய்ந்து அரபிக்கடலில் கலந்துவந்தது. இது கடலொடு கலந்த இடத்திற்கு அருகிற்றான் பழைய சேரர் தலைநகரான வஞ்சி மாநகரம் இருந்தது என்பது சிலப்பதிகாரத்திலிருந்து தெரிகிறது. சேராது கடற்றுறைப் பட்டினமும் வாணிகத் தலமுமாகப் புகழ் பெற்ற முசிறி என்பது இப் பேரியாறு கடலொடு கலக்கும் இடத்தில் அமைந்திருந்தது.

மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குச் சரிவி

லுள்ள பகுதி முழுவதும் நீரில்லாக் குறையால் வளமற்றிருந்தது. ஆதலின், வளமிக்க பகுதியில் பாயும் பேரியாற்றினை, மலையினைக் குடைந்து, வளம் குறைந்த பகுதியிற் பாயுமாறு செய்ய அரசாங்கத்தார் விரும்பினர். இத்தகைய கருத்தினை முதன்முதல் வெளியிட்டவர் இராமநாதபுரம் சம்ஸ்தான முதலமைச்சரான முத்து அருளப்ப பிள்ளை என்பவரேயாவர். அவர் பெரியாற்றினின்று புதியதொரு வழி வகுக்க இயலுமா என்பதை ஆய்ந்தறிய இத்துறையில் வல்ல அறிஞர் பன்னிருவரை 1798-ஆம் ஆண்டு அமர்த்தினர். அப்பன்னிருவரும் இம் முயற்சி சிறந்ததுதான் என்றும், கைகூடத் தக்கதுதான் என்றும் கூறினர். அமைச்சரது எண்ணமும் அறிஞர்களது கருத்துரையும் வளமான துலைக்கு உரியனவாய் இருந்தன. ஆயின், எண்ணமும் கருத்தும் ஈடேறப் போதிய பணமில்லாக் குறை ஏற்பட்டது. அதனுல் ஏறத்தாழப் பத்தாண்டுகள்வரை எண்ணம் செயலாக உருக்கொள்ளவில்லை.

## கருத்து வேறுபாடுகள்

1808-ஆம் ஆண்டு சர். ஜேம்ஸ் என்னும் பொறியியல் வல்லுநர் மிகுந்த கவனத்துடன் பெரியாற்றில் ஏற்படவிருக்கும் புதிய மாற்றத்தைப் பற்றி ஆராய்ந்து, அது செயலாற்ற முடியாத திட்டம் என்று கூறினுர். 1817-ஆம் ஆண்டு மேஜர் ரைவ்ஸ் என்பார் அத்திட்டம் செயலாற்றக் கூடியதுதான் என்றனர். பெரியாற்றின் குறுக்கே 162 அடி உயரத்தில் மண்ணுல் ஆனதொரு அணையைக் கட்டிக் கால்வாய் ஒன்றின் வாயிலாய்

நீரைத் திருப்பித் தேக்கலாம் என்பதுதான் அவரது செயல் திட்டத்தின் கருத்து. இத்திட்டம் ஆற்றின் போக்கைத் திருப்புவதையே அடிப்படையாகக் கொண்டதாக அமைகின்றது. இம்முறையில் செயலாற்றப் பதினேழரை லட்சம் ரூபாய் செலவாகும் என்று அவர் மதிப்பிட்டார். எனவே மேஜர் ரைவ்ஸ் கருத்து மேலும் ஆராய வேண்டிய நிலைமையில் அமைந்தது.

1868-ஆம் ஆண்டு முதல் 1870-ஆம் ஆண்டு வரை **பென்னிக்யுக், ஸ்மித்** என்பவர்கள் பெரியாற்றுத் திட்டத்தை மேலும் ஆராயலாயினர். மேஜர் ரைவ்ஸ் கூறிய முறையில் சிறந்த சிலவற்றை இவர்கள் ஆதரித்தனர்; ஆற்றின் கீழ் ஏழு கல் தொலைவில் அணை ஒன்றை அமைத்தல் வேண்டுமென்றனர். ஆயின் ஆற்றின் கீழ் ஏழு கல் தொலைவில் அணையினை அமைத்தல் இயலுமா என்ற ஐயம் திட்டம் நிறைவேறத் தடையாக இருந்தது.


## புதிய பெரியாற்றுத்திட்டம்

ஆற்றின் குறுக்கில் கல்லால் அணையொன்றை அமைக்க வேண்டுமென்று பென்னிக்யுக் 1882-ஆம் ஆண்டு கூறினார். அவரது யோசனையை வரவேற்று, பெரியாற்றுத் திட்டத்தைப் பரிசீலனை செய்யுமாறு 'ஆட்சியாளர் அவரைக் கேட்டுக் கொண்டனர். அவரும் ஆட்சியாளர் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, அதுகாறும் தீட்டப்பட்ட திட்டங்களை நன்கு ஆராய்ந்து, ஆற்றின் இடையில் பெரியதொரு அணையைக் கட்டுதல் வேண்டும் என்றும், ஆற்றை அடுத்துப் பெரியதொரு ஏரி


அமைக்கப்படல் வேண்டும் என்றும், நீர்த் தேக்கத்தின் வழியாக ஒரு கால்வாய் வெட்டப்படுதல் வேண்டும் என்றும், இதுவே புதிய பெரியாற்றுத் திட்டம் என்றும் கூறினர். இத்திட்டம் முழுமையும் செவ்வையாய் முடிய அறுபத்திரண்டு லட்சம் ரூபாய் செலவாகும் என்பதையும் தெரிவித்தார்.

## பெரியாற்றில் அணை

பெரியாற்றின் குறுக்கே அணை கட்டவேண்டும் என்ற எண்ணம் செயலுருக் கொண்டது. ஆயின், தொடர்ந்து வேலை செய்ய முடியாத நிலையில் போக்குவரத்து இடையூருக அமைந்தது. சுமார் 76 மைல் தொலைவிலிருந்து வேலைக்குரிய எல்லா வகைப் பொருள்களையும் கொணர வேண்டியிருந்தது. பணியாளர் மலையுச்சியிலிருந்து கட்டப்படும் அணைக்கட்டுவரை நீண்ட ஒரு கால்வாயை முதலில் வெட்டி முடித்தனர். மிகவும் அகன்றுள்ள பெரியாற்றின் இடையில் ஆற்றின் போக்கை எதிர்த்துத் தடை செய்யும் முறையில் அணை கட்டுவது தொடக்கத்தில் முழு வெற்றியை அளிக்கவில்லை. அடிக்கடி அடிப்படை ஆட்டம் கண்டது. இங்ஙனம் பல தொல்லைகளிடையில் அடிப்படை அமைக்கப்பட்டது. பின்பு தொடர்ந்து முயன்று 1895-ஆம் ஆண்டு அணை கட்டி முடிக்கப்பட்டது. அணையை ஒட்டி அதன் இடப்புறத்தில் 221 அடி நீளமான சுவர் எழுப்பப்பட்டது. இவ்வாறே வலப்புறத்தில் 434 அடி நீளமுடைய சுவர் எழுப்பப்பட்டது. கைப்பிடிச் சுவரும் சேர, அணை, ஆற்றின் போக்கிலிருந்து 176 அடி உயரமுடையதாயிற்று. அணையின் நீளம் 1241 அடி ; ஆழம்



பெரியாற்று நீர் வெளிப்படும் இடம்



பெரியாற்று நீர்வீழ்ச்சி

144 அடி 6 அங்குலம். அணையின் உயரத்தில் உள்ள சுவரின் அகலம் 12 அடியாகும். அணையின் முன்புறச் சுவரும் பின்புறச் சுவரும் பாறைக் கற்களால் அமைக்கப்பட்டன. இருபுறச் சுவர்கட்கும் இடைப்பட்ட பகுதி 'காங்ரீட்' என்னும் கலவையால் நிரப்பப்பட்டது. இங்ஙனம் வலுமிக்கதாய்க் கட்டப்பட்ட அணையின் தேக்கத்தால் அமைந்த ஏரி 8000 ஏகருக்கு மேற்பட்ட நில அளவும் 176 அடி ஆழமும் கொண்டதாக அமைவுற்றது.

அணையில் ஆங்காங்குள்ள மதகுகள் நீர்மட்ட நிலையைச் சரி செய்கின்றன. கடைசி மதகிலிருந்து வெளிப்படும் பெரியாற்று நீர் மலையிலேயே குடையப்பட்ட சுரங்க வழியில் பிரயாணம் செய்கின்றது. அச்சுரங்கத்தின் நீளம் ஏறத்தாழ 2500 அடி; சுரங்கத்தின் உயரம் ஏறத்தாழ 12 அடி; அகலம் 20 அடி. இவ்வளவு தொலை நீண்டுள்ள சுரங்கத்தின் வழியாகப் பிரயாணம் செய்யும் நீர், மலையின் நடுப்பகுதியிலேயே சுரங்கத்தினின்றும் வெளிப்பட்டு, இயற்கையாக மலையில் அமைந்துள்ள பள்ளங்கள் வழியே மிக்க விரைவோடு பாய்கின்றது. இங்ஙனம் பாய்ந்து வரும் நீர் குறிப்பிட்ட ஓர் இடத்தில் நீர்த் திவலைப் படலங்களை உண்டாக்கிக் கொண்டு பேரிரைச்சலோடு கீழ்நோக்கிப் பாய்கின்றது. இங்ஙனம் பாய்ந்து செல்லும் நீர் மலைகளில் அமைந்துள்ள பள்ளங்கள் வழியே விரைந்து சென்று, இறுதியில் மலைச்சரிவின் வழியாக உருகிய வெள்ளி சரிந்து வருவது போன்ற காட்சியுடன் தரை மட்டத்தை அடைகின்றது; அடைந்து வீரவனுற்றில் கலக்கின்றது. இவ்வாறு பெரியாற்றுத் தேக்கநீர் வீரவனுற்றில் பாய, வீரவ

ஞறு சுருளியாற்றில் கலக்கின்றது. வீரவஞறும் சுருளியாறும் வையையாற்றில் கலக்கின்றன.

## பெரியாற்று மின்சார உற்பத்தித் திட்டம்

1932-இல் பெரியாற்று நீரில் மின்சாரத்தைத் தோற்றுவிக்கும் திட்டம் ஒன்று சென்னை அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்டது. ஆயின் பெரியாற்று நீரைப் பயிர்த் தொழிலுக்குத் தவிர மின்சாரம் தோற்றுவிக்கப் பயன்படுத்தக் கூடாது என்று திருவாங்கூர் அரசாங்கம் வற்புறுத்தியது. இவ் வற்புறுத்தலால் சென்னை அரசாங்கம் தயாரித்த மின்சாரத் திட்டம் தொழிற்படவில்லை.

இந்திய அரசாங்கத்தின்கீழ்த் திருவாங்கூர்-கொச்சி அரசாங்கம் அமைப்புண்ட பின்புதான் சென்னை அரசாங்கத்துக்கும் திருவாங்கூர்-கொச்சி அரசாங்கத்துக்கும் பெரியாற்று மின்சார உற்பத்தி பற்றிய திட்டமான முடிவேற்பட்டது. அதன் பயஞகப் பெரியாற்று நீரைச் சென்னை அரசாங்கம் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தலாம் என்றும் அதற்காகத் திருவாங்கூர்-கொச்சி அரசாங்கத்திற்குச் சென்னை அரசாங்கம் குறிப்பிட்ட தொகை கொடுக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப் பட்டது.

பெரியாற்று நீர் மலையிலிருந்து தரையை நோக்கிப் பாய்ந்து வரும் மலையடிவாரத்தில் மின் சார உற்பத்தி நிலையம் அமைக்கப்படுகின்றது. இதற்குரிய அடிப்படைக் கல் சென்னை அரசாங்க முதல் அமைச்சர் உயர்திரு. காமராசரால் 11-2-1955-இல் நடப்பட்டது. நான்கு ஆண்டுகளில் இத்திட்டம் நிறைவேறும் என்று எதிர்பார்க்கப்படு

கிறது. இத்திட்டம் நிறைவேறிவிடின் இதற்காகும் செலவுத் தொகை, தேய்மானச் செலவு, பாதுகாப்புச் செலவு, திருவாங்கூர்-கொச்சி அரசாங்கத்துக்குக் கொடுக்கவேண்டும் தொகை ஆகிய எல்லாச் செலவுகளும் போக, இத்திட்டத்தால் நல்ல வருமானம் கிடைக்கும் என்று அறிஞர் கூறுகின்றனர்.

இங்குக் கட்டப்படும் மின் உற்பத்தி நிலையம், மழைக் காலமாகிய ஜூன் முதல் பிப்ரவரி வரையில் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் கிலோவாட் மின்சாரமும், வரண்ட காலமாகிய மார்ச்சு முதல் மே வரையில் இருபத்து நாலாயிரம் கிலோவாட் மின்சாரமும் தோற்றுவிக்க முடியும் என்று அறிஞர் அறைகின்றனர்.

இத்திட்டத்திற்குப் பத்துக் கோடியே நாற்பத்தேழாயிரம் ரூபாய் செலவாகும் என்று முதலில் மதிப்பிடப்பட்டிருந்தது. ஆயின் இத்திட்டத்தில் சில மாறுதல்கள் பின்னர்ச் செய்யப்பட்டன. இதனால் முதலில் மதிப்பிட்ட தொகையைவிட இப்பொழுது செலவுத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது.

இம் மின்சார உற்பத்தித் திட்டத்திலிருந்து ஏறத்தாழ இருபதாயிரம் சிற்றூர்களுக்கு மின்வசதி அளிக்கலாம். அங்ஙனம் அளிக்கப்படின், இந்தியாவில் மின்சாரத்தைத் தோற்றுவித்து அதனைப் பயன்படுத்தும் மாகாணங்களுள் நமது சென்னை மாகாணம் முதல் இடத்தைப் பெற்றுவிடும் என்று அரசாங்க அலுவலர் கூறுகின்றனர்.

# 3. வையையின் தோற்றமும் போக்கும்

### மதுரை மாவட்டம்

சென்னை மாநகருக்குத் தெற்கே உள்ள மாவட்டங்களுள் சிறந்தது மதுரை மாவட்டமாகும். மதுரைக்கு வடக்கே கோயமுத்தூர் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களும், கிழக்கே திருச்சிராப்பள்ளியும் புதுக்கோட்டைச் சீமையின் ஒரு பகுதியும், சிவகங்கைச் சமீனும், தெற்கே சிவகங்கை இராமநாதபுரம் ஆகிய இரு சமீன்களும் உள்ளன. மேற்குப்புறம் முழுவதும் மேற்குத் தொடர்ச்சிமலை பரவியுள்ளது.

இங்ஙனம் பல மாவட்டங்களும் மேற்குத் தொடர்ச்சி மலையும் அணிசெய்ய அமைந்த மதுரை மாவட்டம் திண்டுக்கல், கொடைக்கானல், மதுரை, மேலூர், நிலக்கோட்டை, பழநி, பெரியகுளம், திருமங்கலம் என்னும் எட்டுத் தாலூகாக்களைக் கொண்டுள்ளது.

### மலைவளம்

மதுரை மலைவளம் கொண்டதொரு மாவட்டமாகும். மதுரைக்கு மேற்கே பழநிமலைத் தொடரும், தெற்கே கம்பம் பள்ளத்தாக்கும், கம்பம் பள்ளத்தாக்கை அடுத்து வருஷநாடு ஆண்டிப்பட்டி மலைத்தொடரும், அதற்கு வடக்கே நாகமலையும் உள்ளன. சிறுமலை என்பது மதுரைக்கு வடமேற்கில் உள்ளது. இவைகட்குக் கிழக்கே அழகர் மலையும், கரண்ட மலையும் உள்ளன. 'நத்தம்' என்ற பகுதியை அடுத்துள்ள சிறுசிறு குன்றுகள் 'நத்தம் மலைகள்' எனப் பெயர் பெற்றுள்ளன.

## பழநி மலைத்தொடர்

பழநித் தாலூகாவில் உள்ள பெரிய மலைத் தொடரே பழநிமலைத் தொடர் என்பது. அஃது ஏறத்தாழப் பத்து மைல் நீளமும் இருபத்தைந்து மைல் அகலமும் உடையது.

## வருஷ நாடு - ஆண்டிப்பட்டி மலைத்தொடர்

மதுரை மாவட்டத்தில் பழநி மலைத்தொடரை அடுத்துச் சிறப்பு மிகுந்த மலைத்தொடராகக் கருதப்படுவது வருஷநாடு - ஆண்டிப்பட்டி மலைத் தொடர். இம்மலைத்தொடர் வருஷநாடு பள்ளத் தாக்கின் தெற்குப் பகுதியின் ஒரு மூலையிலிருந்து தொடங்கி, ஆண்டிப்பட்டி என்னும் கிராமத்தின் வடக்குப் பகுதிவரைப் பரவியுள்ளது. இதனுற்ருன் இம்மலைத்தொடர் வருஷநாடு - ஆண்டிப்பட்டி மலைத்தொடர் என்னும் பெயர் பெற்றது. இம் மலைத்தொடர் மதுரை மாவட்டத்தின் தென்மேற் குப் பகுதியில் தொடங்கி வடகிழக்குப் பகுதி வரைப் பரவியுள்ளது. வருஷநாடு என்பதற்கு 'மழை நாடு' என்பது பொருள்.

## வருஷ நாட்டுப் பள்ளத்தாக்கு

வருஷநாட்டுப் பள்ளத்தாக்கை ஒட்டி அமைந் துள்ள வருஷநாடு என்னும் கிராமம் மக்களால் புறக்கணிக்கப்பட்ட சிற்றூராக உள்ளது. பல் லாண்டுகட்கு முன்னரே அச்சிற்றூரை மக்கள் புறக்கணித்தமைக்கு அங்குப் பரவிய கொடிய நோயான மலேரியாவே காரணமாகும். அச்சிற் றூர்க்கு அருகிலுள்ள நரசிங்கபுரமும் கவனிப்பா ரற்ற நிலையில் உள்ளது. பள்ளத்தாக்கின் மிக

வுயர்ந்த கடைசிப் பகுதியில் கடல் மட்டத்தைவிட 6617 அடி உயரமான 'கோட்டை மலை' உள்ளது.

## இயற்கையின் விருந்து

வருஷநாட்டுப் பள்ளத்தாக்கில் பல நூற்றுண்டுகட்கு முன் பாலிமொழி பேசிய சமண முனிவர் அல்லது பௌத்தமுனிவர் சிலரே இருந்து வந்தனர். பள்ளத்தாக்கின் மேற்குப்புறம் முழுவதும் ஆண்டிப்பட்டி மலைத்தொடர் பரவியுள்ளது. பல்லாண்டுகளாக இதனைப் பற்றிய ஆராய்ச்சிகள் ஏதும் நிகழ்த்தப்படாமலிருந்தன. உலகத்தின் நாடுகளையும் மற்ற இயற்கை வளங்களையும் விளக்கும் நூலில் (அட்லாசில்) 'வருஷநாடு மிகவுயர்ந்துள்ள மலைத்தொடராகும். அடர்ந்த காடும் அம் மலைத்தொடரை ஒட்டியுள்ளது' என்பது குறிக்கப்பட்டுள்ளது. இக்காடு இருபுறச் சரிவிலும் பரவியிருத்தல் பார்ப்பதற்குச் சிறந்த ஒரு இயற்கை விருந்தாக உள்ளது. மலையடிவாரத்திலும் அடர்ந்த காடு இருத்தல் குறிப்பிடத்தக்கது.

## சதுரகிரி

வருஷநாட்டுப் பள்ளத்தாக்கின் கிழக்குப் பகுதி ஒரே தொடர்ச்சியாய் இல்லாமல் இடையிடையில் பல மலைகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் குறிப்பிடத்தக்கது **சதுரகிரி** என்பது. இம்மலை பார்ப்பதற்குச் சதுரவடிவமாக இருப்பதால் இப்பெயர் பெற்றது. சதுரகிரியின் உயரம் 4712 அடி. இம்மலையில் இன்றும் சாதுக்கள் அல்லது தவசிகள் வாழ்ந்துவருவதாக அப்பக்கத்துக் குடிமக்கள்


கூறுகின்றனர். யாத்ரீகர் சதுரமலையைக் கண்டு களிக்கின்றனர்.

## வையையின் பிறப்பிடம்

இங்ஙனம் பல்லாற்றானும் சிறந்துள்ள வருஷ நாட்டுப் பள்ளத்தாக்குத்தான் வையையாற்றின் பிறப்பிடமாகும். பழநிமலைத் தொடரிலும் வருஷ நாடு - ஆண்டிப்பட்டி மலைத்தொடரிலும் உள்ள சிற்றாறுகள் எல்லாம் வருஷ நாட்டுப் பள்ளத் தாக்கில் உள்ள வையையுடன் கலக்கின்றன. இங்ஙனம் தோற்ற நிலையிலேயே பல துணையாறுகளைக் கொண்ட வையை, மதுரையின் வடகிழக்குப் பகுதியிற் பாயத் தொடங்குகிறது.

## சுருளியாறு

வருஷநாட்டுப் பள்ளத்தாக்கினை அடுத்துள்ள கம்பம் பள்ளத்தாக்கிலிருந்து பாயும் ஆற்றுக்குச் சுருளியாறு என்பது பெயர். மலைமீதிருந்து நிலம் நோக்கிப் பாயும் இந்த ஆறு காண்பதற்கு அழகிய தொரு தோற்றத்தை நல்குகிறது. மலைப்பகுதிகளில் சிறப்புமிக்க குகைகள் இருப்பதால், ஆண்டு தோறும் கணக்கற்ற மக்கள் சென்று அவற்றைக் கண்டு மகிழ்கின்றனர்; அருவியில் நீராடி நலம் பெறுகின்றனர். திருவாங்கூர்ச் சீமையில் பாயும் ஆறுகளுள் ஒன்றான பெரியாற்றில் அணைகட்டி, நீர் தேக்கி, அந்நீரை வீரவனுற்று வழியாக இச் சுருளியாற்றில் கலக்கவிட்டிருப்பதால், சுருளி யாறு சிறப்படைந்தது. பெரியாற்றின் போக்கு மாற்றப்பட்டதால் சுருளியாற்றில் ஆண்டின் ஒன்பது மாதங்களில் நீர் நிரம்பியிருக்கும்.


வங்கக் கடல்
தஞ்சை மாவட்டம்
திருப்புத்தூர்
மேலூர்
நிலக்கோட்டை
அணைப்பட்டி (பேரணை)
புதிய ஆறு
வைகை
குன்னூர்
பெரியகுளம்
கம்பம்
கூடலூர்
முல்லையாறு
வைகை
ஆண்டிப்பட்டி தொடர்
உசிலம்பட்டி
கொடிமங்கலம்
ஆனைமலை
மதுரை
நாகமலை
திருப்பரங்குன்றம்
திருமங்கலம்
சிவகங்கை
திருவாடானை
திருப்பூவணம்
மானாமதுரை
பரமக்குடி
கமுதக்குடி
வைகை
பாண்டிக் கண்மாய்
ஆற்றங்கரை
இராமநாதபுரம்
முதுகுளத்தூர்
அருப்புக்கோட்டை
சாத்தூர்
ஸ்ரீவில்லிபுத்தூர்
வருஷநாடு
மேற்குத் தொடர்ச்சி மலை
பெரியாறு
நீர்த்தேக்கம்
திருவிதாங்கூர்-கொச்சி இராச்சியம்
திருநெல்வேலி மாவட்டம்

வைகையின் போக்கு

## தேனியாறு

போடிநாயக்கனூர்ப் பள்ளத்தாக்கில் தோற்றம் கொள்ளும் ஆற்றின் பெயர் தேனி என்பதாகும். அல்லி நகரம் என்னும் ஊரை அடுத்து இரண்டு கல் தொலைவில் சுருளியாறு தேனியாற்றுடன் கலக்கின்றது. சுருளியாற்றின் பெயர் இத்துடன் நிற்க, மிகுந்த அளவு தண்ணீருடன் தேனியாறு பாய்கிறது. இரண்டு கல் கடந்ததும், தேனியாறு வையையாற்றுடன் கலக்கின்றது. தேனியாறு, சுருளியாறு ஆகிய இரண்டு ஆறுகளின் நீரும் சேர, வையையாறு அகற்சி மிகுந்ததாகவும், ஆழம் மிகுந்ததாகவும் வேகம் மிகுந்ததாகவும் பாய்கின்றது.


## இரண்டு ஆறுகள்

'வராக நதி' என்னும் ஆறு பழநிமலையின் மேற்குப் பகுதியிலிருந்து பாய்வதாகும். இவ்யாறு பெரியகுளம் என்னும் நகரம் வழியாய்ப் பாய்ந்து, 'பாம்பாறு' என்னும் ஆற்றுடன் கலக்கின்றது. 'பாம்பாறு' என்பது கொடைக்கானலில் உள்ள ஆறுகளுள் சிறந்த ஒன்றாகும்.


'மஞ்சளாறு' என்பது பழநிமலையை அடுத்துப் பாய்வது. இது வத்தலகுண்டு என்னும் ஊரில் பாய்ந்து, பழநிமலையின் அடிப்பகுதியில் உற்பத்தியாகும் அய்யம்பாளையம் ஆற்றுடன் கலக்கின்றது.

## வையையில் பேரணை

ஆண்டிப்பட்டி மலை, நாகமலை ஆகிய மலைகளின் வடக்குச் சரிவின் வழியாய்ப் பாயத் தொடங்கிய வையையுடன் வராக நதி, மஞ்சளாறு



வையையில் பேரணை



வையையில் பேரணை

என்ற இரண்டு ஆறுகளும் கலக்கின்றன. இங்ஙனம் பல ஆறுகளின் கூட்டமைப்பாய் வைகையாறு விளங்குகின்றது. சிற்ருறு என்னும் நிலையில் வருஷநாட்டுப் பள்ளத்தாக்கில் தோற்றம்கொண்ட வைகையாறு, பேரியாறு என்று சொல்லத் தகுந்த நிலையில் பாயத் தொடங்குகிறது. அது நிலக்கோட்டைத்தாலுகாவில் உள்ள இன்றைய அணைப்பட்டி என்னும் இடத்தில் இரண்டாகப் பிரிகிறது. ஒரு பிரிவு வைகை என்னும் பெயரிலும், மறு பிரிவு பெரியாற்றுக் கால்வாய் என்னும் பெயரிலும் பாய்கின்றன. அணைப்பட்டியில் கட்டப்பட்டுள்ள அணையின் பெயரே பேரணை என்பது. 1895-ஆம் ஆண்டு சென்னை மாகாணக் கவர்னர் வென்லக் பிரபு பேரணைக்குரிய திட்டங்களை விளக்கினர். 1897-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ஆம் தேதிக்குள் அணை கட்டுவதற்குரிய ஆக்கவேலைகளைப் பற்றிய விவாதம் முடிவடைந்தது. அணை கட்டி முடிக்கச் சுமார் எண்பத்தொரு லட்சத்து முப்பதாயிரம் ரூபாய் செலவாகியது. இந்த அணையினுல் வையையாற்று நீர் தேக்கப்பட்டுப் பெரியாற்றுக் கால்வாயில் விடப்படுகிறது. இக் கால்வாய் நீர், நீர் வசதியற்ற மேலூர்த் தாலுகாவில் பாய்கிறது.

மதுரையையும் தல்லாகுளத்தையும் வையையின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பெரிய பாலம் ஒன்று இணைக்கின்றது. இப்பாலம் சாதாரண வண்டிகளும் மக்களும் செல்லப் பயன்படுகின்றது. இதனை அடுத்துப் 'புகைவண்டி செல்லத்தக்க பாலம் ஒன்று இருக்கின்றது.

### இராமநாதபுரத்தில் வையை

கமுதகுடிப் புகைவண்டி நிலையத்தை அடுத்து வையையாறு இராமநாதபுரத்தில் பாய்கின்றது. இந்த இடத்திற்கு அருகிற்றான், 'கூத்தன் கால்' என்றொரு கால்வாய் வையையாற்றிலிருந்து பிரிகின்றது. இதற்கு 'வேணுநாத உடைய பிள்ளை கால்' என்ற ஒரு பெயரும் உண்டு. இக்கால்வாய் சுமார் இருபது கல் தொலைவு செல்கின்றது; பரமக்குடியிலும் முதுகுளத்தூரிலும் உள்ள பல ஏரிகளில் நீரை நிரப்புகின்றது.

### இரண்டு கால்வாய்கள்

கமுதகுடிக்கும் பரமக்குடிக்கும் இடையில் தெற்குப் புறமாக வையை யாற்றிலிருந்து இரண்டு கால்வாய்கள் பிரிகின்றன. அவை இரண்டும் முறையே தெளிச்சத நல்லூர் ஏரிகளையும், காட்டுப் பரமக்குடியிலுள்ள ஏரிகளையும் நிரப்புகின்றன.

### இறுதிப் பாலம்

பரமக்குடியின் அருகில் வையையாற்றின் அகலம் மூன்று பர்லாங்கு ஆகும். இந்த ஆற்றைக் கடக்க அண்மையில் பாலம் ஒன்று கட்டப்பட்டது. இப்பாலமே வையையாற்றின் குறுக்கே கட்டப் பட்ட பாலங்களுள் இறுதியானது.

### கிளைகள் பல

பரமக்குடியை அடுத்து வையை யாற்றிலிருந்து பல கிளைகள் பிரிகின்றன. அவற்றுள் சிறப்பானவை பின்வருவனவாகும் :

(1) **மேற்புற நடற்கால் :** இக்கால்வாய் சுமார் பதினைந்து கல் தொலைவு பாய்கின்றது. இது வழியிலுள்ள பல ஏரிகளுக்கு நீரளித்து, இறுதியாக இராஜசிங்கமங்கலம் என்னும் ஏரியில் கலக்கின்றது. இந்த ஏரி மிகப் பெரியது.

(2) **கீழ்ப்புற நடற்கால் :** இக்கால் சுமார் எட்டுக்கல் தொலைவு பாய்கின்றது. இதுவும் முன் சொன்ன காலைப்போலவே இறுதியாக இராஜசிங்கமங்கலம் ஏரியில் கலக்கின்றது. (1) வல்லம் ஏரிக்கால், (2) நாகச்சி ஏரிக்கால், (3) பாண்டியூர் ஏரிக்கால், (4) மும்முடிஸ்தான் ஏரிக்கால், (5) காவனூர் ஏரிக்கால் என்பன பிற கிளைகளாகும். இவை ஏழும் வையையாற்றின் வடக்குப் பகுதியிலிருந்து பிரிவன. இவற்றுள் முதலிரண்டு தவிர ஏனைய கிளைக்கால்கள் மேலும் பல நீர்நிலைகளை நிரப்புகின்றன. இவையே அல்லாமல், தெற்குப்புறமாகப் பிரிந்துசெல்லும் நீர்க்கால்கள் பல உண்டு. அவை, (1) செல்லூர்க்கால், (2) அரிய நீண்டான் கால், (3) கலரிக்கால், (4) காமன்கோட்டைக்கால், (5) முத்தியால் கால், (6) போகலூர்க்கால் என்பன.

## ஆற்றங்கரை

இராமநாதபுரத்திலிருந்து ஐந்து கல் தொலைவில், வடமேற்குப்புறத்தில் மிகப் பெரியதொரு ஏரி உள்ளது. வையையாறு இறுதியில் இந்த ஏரியில்தான் கலக்கின்றது. இவ்விடத்தில் ஆற்றின் அகலம் இருநூறடிக்கு மேலாக உள்ளது. இப் பெரிய ஏரியினின்று நீர்க்கால் ஒன்று ‘ஆற்றங்கரை’ என்னும் இடத்தில் கடலுடன் கலக்கின்றது. அதற்கு வெட்டாறு என்பது பெயர். ஆற்றங்கரை

என்பது உச்சிப்புளி என்னும் புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே மூன்றுகல் தொலைவில் உள்ள சிறியதொரு கிராமமாகும்.

## முற்றுப்பெறுத அணை

இராஜசிங்கமங்கல ஏரியில் அணைகள் என்று சொல்லத் தகுந்த நிலையில் முற்றுப்பெறுதன வடபுறத்தில் மூன்றும், தென்புறத்தில் ஒன்றுமாய் நான்கு உள்ளன. வடபுறத்தில் உள்ள முதல் அணை சுமார் 500 அடி நீளமுள்ளது. இதன் வழியாகவே வையையாறு ஏரியினுள் நுழைகின்றது. இங்குள்ள மதகுகள் தாமாக இயங்குவன. இவை மிகப் பழையன. இவை யாவும் இராமநாதபுரம் சம்ஸ்தான கலெக்டராக இருந்த உயர் திரு R. A. கோபாலசாமி அவர்களால் திருத்தப்பட்டு அமைக்கப்பட்டன.

இரண்டாம் அணை 1000 அடி நீளமுடையது. மூன்றும் அணை பதினெரு மதகுகளை உடையது. இவை மூன்றினின்றும் வழியும் நீரே 'வெட்டாறு' என்னும் பெயருடன் கடலில் கலக்கின்றது.

தென்புறத்தில் உள்ள அணை ஒன்பது மதகுகளை உடையது. இது மதுரை - இராமநாதபுரம் சாலையில் உள்ளது. இராமநாதபுரம் புகைவண்டி நிலையத்தின் எதிரே தோற்றமளிக்கும் ஏரி இவ்வணையின் வழியாய்ச் செல்லும் நீரின் தேக்கமேயாகும். இந்த ஏரியின் பெயர் சக்கரைக்கோட்டை ஏரி என்பதாகும்.

### வையையாறு

அணைப்பட்டியில் அணை கட்டப்பட்ட பின்பு ஆண்டில் ஒன்பது திங்கள் வையையாறு வரட்சியானதாகவே தோற்றமளித்து வருகின்றது. அக்டோபர் முதல் டிசம்பர் முடியவுள்ள மூன்று திங்களில் மட்டுமே வையையாற்றில் நீரைக் காண முடியும். மழை மிகுதிப்படின் வையையில் வெள்ளம் வருவதுண்டு. வையையாற்றுப் பாய்ச்சலால் மதுரை மாவட்டத்தின் தென்பகுதியும் இராமநாதபுர மாவட்டத்தின் ஒரு பகுதியும் வளமுற்று விளங்குகிறது; நெல், கரும்பு முதலியன வளமுறப் பயிராகின்றன.

### புதிய திட்டம்

மதுரை மாவட்டத்திலுள்ள உசிலம்பட்டிக்கு அருகில் வையையாற்றில் ஓர் அணையைக் கட்டித் திருமங்கலம் தாலூகாவிலும் அதனையடுத்தும் உள்ள நிலங்களுக்கு நீர்வசதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டிருக்கின்றது. அத்திட்டம் நிறைவேற்றப்பட்டுவருகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

# 4. இலக்கியத்தில் வையை

வையையாற்றைப் பற்றிய விவரங்களை இலக்கியம் கொண்டு உணருமுன், அவ்யாறு பாயப் பெறும் பாண்டிய நாட்டின் இயற்கைச் சிறப்பினை இலக்கியம் கொண்டு உணர்தல் இன்பம் பயப்பதாகும்.

## பாண்டிய நாட்டு இயற்கைச் சிறப்பு

### பாண்டிய நாடு

பாண்டிய நாடு என்பது தென்வெள்ளாற்றை வட எல்லையாகவும், குமரிமுனையைத் தென் எல்லையாகவும், வங்கக் கடலைக் கிழக்கெல்லையாகவும், இன்றைய திருவாங்கூர்-கொச்சிச் சீமையை மேற்கு எல்லையாகவும் பெற்ற நிலப்பகுதியாகும். இதன்கண் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் அடங்கும். பாண்டி நாட்டின் தலைநகரம் **மதுரை**; துறைமுகப் பட்டினம் கொற்கை. பாண்டிய நாடு முத்துக்குப் பெயர் பெற்றது.

### பாண்டிய நாட்டின் பழைமை

பாண்டியர் படைப்புக்காலந் தொட்டு மேம்பட்டுவரும் தொல்குடியினர் என்பது அறிஞர் துணிபு. வடமொழியாளர் ஆதிகாவியமெனக் கொண்டாடும் **வான்மீகி ராமாயணத்தில்** பாண்டிய வேந்தரது தலைநகரைப்பற்றிய சிறப்புரைகள் உள்ளன. வியாசமுனிவர் எழுதிய **மகாபாரதத்தில்**, ஐவருள் ஒருவரான அருச்சுனன் பாண்டியர்

குலப் பைங்கொடியை மணந்தனன் என்பது கூறப்படுகிறது. இலங்கையை ஆண்டுவந்த விசயன் என்பவன் பாண்டிய மன்னன் மகள் ஒருத்தியை மணந்து மகிழ்ந்தான் என்ற செய்தியை இலங்கை வரலாற்றை விளக்கும் **மகாவம்சம்** என்னும் வரலாற்று நூல் கூறுகின்றது. ஏறத்தாழக் கி. மு. மூன்ரும் நூற்ருண்டில் சந்திர குப்தன் அரசவைக்கு வந்த **மெகஸ்தனிஸ்** என்னும் கிரேக்க தூதன் பாண்டிய நாட்டின் வரலாற்றைப்பற்றி எழுதியுள்ளான். கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர் மகதநாட்டை ஆண்ட மௌரியப் பேரரசனை அசோகனின் **கல்வெட்டுக்களிலும்** பாண்டியர்களைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. **பிளைநி** என்ற மேல்நாட்டு வரலாற்று ஆசிரியரும் பாண்டிய நாட்டைப்பற்றிக் கூறியுள்ளார்.

## குறிஞ்சி நிலச் சிறப்பு

இங்ஙனம் வரலாற்றுச் சிறப்புடைய பாண்டிய நாட்டில் வையையாறும் பொருநையாறும் பாய்கின்றன. இந்நாடு குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை நிலப்பகுதிகளையும் கொண்டது. குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த இடமுமாகும். முருகக் கடவுள் இந்நிலத்துக்குரிய தெய்வமாகும். இந்நிலத்தில் ஐவன நெல்லும் தோரை நெல்லும் விளையும். ஒருபுறம் தினைக் கொல்லைகளில் முற்றிய கதிர்களைக் கவராதிருக்கும் பொருட்டுப் பெண்கள் கிளியோட்டும் ஓசையும், பிறிதொருபுறம் அவரையைத் தின்னவரும் காட்டுப் பசுவை ஓட்டும் ஓசையும், மற்ருெருபுறம் ஆண்பன்றியைப் பொறிக்கிடங்கில் குறவன்

வீழ்த்திக் கொல்வதால் உண்டாகும் ஓசையும், வேறொரு புறம் வேங்கைமலர் பறிக்கும் குறமகளிர் 'புலி, புலி' என்று கூவும் ஆரவாரமும், விலங்குகள் ஒன்றையொன்று தாக்கும்பொழுது உண்டாகும் பேரொலியும் ஒரு சேரக் கலந்து மலையிடத்து எதிரொலி செய்யும்.

## பாலையின் இயல்பு

பாலைநிலக் கடவுள் கொற்றவை (துர்க்கை). அருவிகளோ பிற நீர்நிலைகளோ இல்லாத பாலை நிலத்தில் ஊகம்புல் வைக்கோல்போற் காய்ந்திருக்கும். மணல் வெளியில் பெருங்காற்று அடிப்பதால் மணற்குன்றுகள் திடீரெனத் தோன்றும். பாலை நிலத்தில் ஆறலை கள்வர் வாழ்வர். இவர்கள் வழியிற் செல்லும் மக்களை வழிமறித்துப் பொருளைக் கவர்ந்தும் அயலூர்களில் உள்ள வீடுகளிலிருந்து பொருளைக் கவர்ந்தும் வாழ்வர். ஆறலை கள்வர் பிறர் இன்னலுறுவதில் இன்பம் காண வேண்டும் என்னும் விருப்பினர். இவர்களால் வழிப்போக்கர்க்கு எவ்வித இடையூறும் உண்டாகாத நிலையில் மன்னன் வீரர்களை அனுப்பிவைப்பது வழக்கம். மன்னனால் அனுப்பப்பட்ட வீரர்கள் இலையால் வேய்ந்த குடில்களில் வாழ்வர்; மான் தோலாகிய படுக்கையிற் படுப்பர்; வில்லும் அம்பும் ஏந்தியவராய்ப் பாலைப் பெருவெளியில் திரிவர்.

## முல்லையின் நிலைமை

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்படும். இந்நிலத்துக் கடவுள் திருமால். இங்குள்ள பாறைகள்மீது முசுட்டைப் பூவும், முல்லைப் பூவும்

உதிர்ந்து கிடக்கும். சாமை விதைத்தல், வரகு விதைத்தல், அவற்றின் களை கட்டல், அவற்றை அரிதல், கடாவிடுதல், கொன்றைக் குழல் ஊதுதல், கொல்லேறு தழுவுதல், குரவைக் கூத்தாடுதல், கான்யாறுடல் முதலியன இந்நிலத்து மக்கள் தொழில்களாகும்.

## மருதத்தின் மாண்பு

வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதம் எனப்படும். மருதநிலத்துக் கடவுள் இந்திரன். மழைநீர் ஒன்று சேர்ந்து வெள்ளமாகி மருதநிலத்தில் பாயும். அந்நீர் கவலைக் கிழங்குகள் அகழ்ந்த குழிகளில் பாய்வதால் ஏற்படும் ஓசை ஒருபுறம் கேட்கும். களிறுகள் தாண்ட அச்சம் கொள்ளும் முறையில் ஆற்றில் வெள்ளம் பரந்து பாயும். வெள்ள நீர் குளங்களில் தேக்கி வைக்கப்படும். அந்நீர் பாய்தலால் யானை மறையுமளவு நெற்பயிர் ஓங்கி வளரும். தேன் மிகுந்து, வண்டுகள் விரும்பி உண்ணும் நிலைபெற்ற தாமரைப்பூ, நீலப்பூ, ஆம்பற்பூ முதலியன குளங்களிலும் மடுக்களிலும் மலர்ந்து அழகுற விளங்கும். வலைஞர்கள் மீன்களைப் பிடித்துவந்து விலை கூறுவர். கரும்பாலைகளின் முழக்கமும், களைபறிக்கும் ஓசையும், கள்ளுண்டோர் ஆராவாரமும், நெல்லறுப்போர் அமளியும், பறவைகள் ஒலியும் மருத நிலமெங்கும் கேட்கும்.

## நெய்தலின் தன்மை

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும். நெய்தல்நிலக் கடவுள் வருணன். நெய்தல்

நில மக்கள் மீன்பிடித்து விற்பர்; முத்தெடுப்பர்; கடல் தந்த பலவகைப் பண்டங்களையும் விலை கூறி விற்பர். யவனர் முதலிய அயல் நாட்டவர் குதிரை முதலியவற்றைப் பாண்டிய நாட்டுத் துறைமுக நகரங்களில் இறக்கி, அவற்றுக்குப் பதிலாக, வெள்ளுப்பு, தீம்புளி, கருவாடு முதலிய பல பண்டங்களைத் தம் கப்பல்களில் ஏற்றிச் செல்வர். மீன்பிடித்தல், உப்புண்டாக்கல், மீன் உணக்கல், அவற்றை உண்ணவரும் பறவைகளை ஓட்டுதல், கடலாடுதல் முதலியன நெய்தல் நில மக்களின் தொழில்கள் ஆகும்.

## பரிபாடலில் வையை

பரிபாடல் என்னும் சங்க நூலில் எட்டுப் பாடல்கள் வையை ஆற்றைப் பற்றியவை. அவற்றில் புதுவெள்ளம் வரும் காட்சி, மக்கள் அதில் விளையாடும் காட்சி முதலியன கீழ்வருமாறு விளக்கப்பட்டுள்ளன:

"மேகங்கள் கடல் நீரை முகந்து வானத்தை நோக்கி எழுகின்றன. நீரை முகந்த அவை கரு நிறமடைந்து, ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லும் காட்சி, பகைப் புலத்தை நோக்கிச் செல்லும் பாண்டியனது யானைக் கூட்டத்தை ஒத்திருக்கிறது. அங்ஙனம் படையெடுத்துச் செல்லும் பாண்டியனது முரசம் அதிர்வது போலக் கார் மேகங்கள் இடி ஓசையை உண்டாக்குகின்றன. அவனது வாள் மின்னுவது போல வானத்தில் மின்னல்கள் தோன்றுகின்றன. அவனுடைய வில் வீரர் விடும் கணக்கற்ற அம்புகள் போல மழைத் துளிகள் பொழிகின்றன.

“இங்ஙனம் பொழியும் மழைநீர் மலைத்தொடரின்மீது விழுந்து பல அருவிகளாகத் தோற்றமெடுக்கிறது. இவ்வாறு தோன்றும் பல அருவிகள் ஒன்று சேர்ந்து பேராருகப் பெருக்கெடுத்து வருகின்றன. இப்பேராறே வையை என்பது. பகைவர் நாட்டின்மீது படையெடுத்துவரும் பாண்டியன் படை தலைநிமிர்ந்து வருதல் போல, வையையாற்று வெள்ளம் மேடு பள்ளங்களைத் தாண்டிக் கொண்டு இரவும் பகலும் பிரயாணம் செய்து வருகின்றது. அதன் இரு கரைகளிலும் வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்திருக்கிற மிகப் பெரிய மரங்களாகிய நாகம், அகில், வாழை, ஞமை, சந்தனம், தகரம், ஞாழல், தேவதாரம் முதலியன வெள்ளப் பெருக்கினுல் ஆட்டங்கொள்கின்றன. இவ்வாறு வையை பெருக்கெடுத்து வருதல், ஒரு கடல் கிளர்ந்து வருவது போலக் காட்சி யளிக்கின்றது. அம் மரங்களிலுள்ள பூக்கள் ஆற்று வெள்ளத்தின் மேல் பரந்து செல்லும் காட்சி, வையை என்னும் மங்கை பூவாடை போர்த்துக்கொண்டாற் போலக் காணப்படுகின்றது.

“வையை ஆறு, ஆடலறியாத நடனமகள் நடந்து செல்வதைப் போல மெதுவாகச் செல்லுகிறது. கணவன்மீது சிறு கோபம் கொண்ட அறிவற்ற மனைவி அவனைக் கடந்து நீங்குவது போலச் சில இடங்களில் எதிர்ப்பட்ட அணைகளை முறித்துச் செல்லுகிறது. மணம் மிகுந்த மலர்கள் மேலும் மேலும் ஆற்று நீரில் விழுந்துகொண்டே இருப்பதால், வெள்ள நீர் பலவகை மணங்களும் பொருந்தியதாக இருக்கின்றது. வெள்ளம் வருவது அறியாது ஆற்றோரத்தில் அமைந்த ஊர்களில் வாழும்

சிறுவர் சிறுமியர் மணல்வீடு கட்டி விளையாடினர். இப்பொழுது வரும் ஆற்று வெள்ளம் அம்மணல் வீடுகளை அழித்துவிடுகிறது. தங்கள் முயற்சியினால் உண்டான மணல் வீடுகள் அழிதலைக் கண்ட அச்சிறுவர் சிறுமியர் மனம் புழுங்குகின்றனர். சிறிய பெண்கள் மணல் பாவை செய்து விளையாடினர். அப்பாவைகள் வெள்ளத்தில் மறைந்தன. அதனால் அச்சிறுமியர் கண்ணீர்விட்டு அழுகின்றனர். இளம்பயிர் உள்ள வயல்களில் வெள்ளம் பாய்வதைக் கண்ட உழவர்கள், தங்கள் முயற்சி வீணானதைக் கண்டு கண்ணீர் வடிக்கின்றனர். ஊரைக் கடல் சுற்றியது போலப் பல கிராமங்களை வெள்ளம் சுற்றிக்கொண்டது. அதைக் கண்டு அவ்வூரார் செய்வகை அறியாது தவிக்கின்றனர். ஆற்றுவெள்ளம் தென்னை, பாக்கு, முதலிய மரங்களின் கழுத்தை முட்டும் அளவுக்கு உயர்ந்து செல்லுகிறது. அதனால் வெள்ளத்தில் செல்லும் வாளை மீன்கள் தென்னம்பாளையையும், கமுகின் பாளையையும் உண்கின்றன. வெள்ளப் பெருக்கினால் நாற்றங் கால்கள் வண்டலிட்டு மேடாயின. வெள்ளம் சோலைகளிற் சென்று பரவுதலால் அச் சோலையிலுள்ள மரங்கள் பூக்கத் தொடங்குகின்றன. வண்டுகள் பூக்களில் உள்ள தேனை உண்ண அச் சோலைகளில் ரீங்காரம் செய்து சுற்றிக்கொண்டிருக்கின்றன.

“ஆற்றில் வெள்ளம் வருதலைக் கேட்டுக் கரையோர ஊர்களிலுள்ள மக்கள் எல்லையற்ற மகிழ்ச்சி அடைகின்றனர். இஃது இயற்கைதானே! உலகத்திற்குத் தண்ணீர் இன்றியமையாதது அன்றோ? புது வெள்ளத்தில் நீராட விரும்பிய

மகளிர் தாம் நீராடுதற்குரிய புடைவைகளை அலங் கரித்து உடுக்கின்றனர். நீராடிய பிறகு தமது கூந் தலின் ஈரத்தைப் போக்கப் புகைக்கப்படும் அகில் முதலியவற்றையும் அவை புகைத்தற்கு நெருப்பை யும் கூந்தலிற் சூடுதற்குப் பூக்களையும் வையை வழிபாட்டிற்குரிய பொருள்களையும் எடுத்துக் கொண்டு வெள்ளத்தை நோக்கிச் செல்கின்றனர். சில இடங்களில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகின் றது. 'கரையை அடைக்க ஆட்களை வரும்படி பறை அறையுங்கள்', என்று கரை காப்பவர் ஓசை யிடுகின்றனர். உடனே பறை ஓசை ஊர்தோறும் கேட்கின்றது. அந்த ஓசை கேட்டுக் கட்டுடல் படைத்துள்ள காளைகள் கரை உடைந்த இடங்களை நோக்கி ஓடுகின்றனர்.

"வையை ஆற்றுப் புதுவெள்ளம் மதுரைக் கோட்டை மதிலைத் தாக்கியபடி பாய்ந்து செல் கின்றது. அந்நகரத்து ஒரு பால் வையையாற்றில் நீராட ஆண் யானைகளும் பெண்யானைகளும் அழைத்துச் செல்லப்படுகின்றன. பொருள் வசதி யுள்ள மக்கள் ஆற்றில் நீராட அலங்கரிக்கப்பட்ட யானைகளின்மீதும் குதிரைகளின்மீதும் பெயர் சொல்லி அழைக்கப்படும் எருது பூண்ட வையத்தி லும் கோவேறு கழுதைமீதும் பல்லக்கிலும் செல்லு கின்றனர். பொதுமக்கள் அணி அணியாக நடந்து செல்கின்றனர். அவருள் இளைஞர்கள் வேலேந்திய முருகனைப் போலக் கம்பீரமாக நடந்து செல்லுகின்றனர். ஒவ்வொரு வாத்தியமும் ஒரு வகைக் கூறுபாடு உடையதாயிருப்பினும், ஓரிடத் தில் ஒரே சமயத்தில் அவை பலவும் ஒலிக்கும் பொழுது, தாள கதியால் அவை அனைத்தும் மென்

னடையனவாய்ச் செல்லும். அவை போல் ஆற்றை நோக்கிச் செல்லும் வலியரும் மெலியரும் இடையினரும் நெருக்கத்தால் மென்னடையினராய்ச் செல்லுகின்றனர்.

பெண்கள் சிலர் அகன்ற தெரு வழியே ஒரு பெண்யானைமீது செல்லுகின்றனர். அவர்களுக்குப் பின் ஒரு களிற்றின்மீது மைந்தர் சிலர் ஏறிச் செல்லுகின்றனர். முதலிற் செல்லும் பெண் யானை, ஒரு மாளிகையின் முன்புறம் சுதையாற் செய்யப்பட்டிருந்த ஒரு புலியின் உருவத்தைக் கண்டு, அஃது உயிரோடுள்ள புலி என்று எண்ணி அஞ்சி ஓடுகிறது. அதன்மீது இருக்கின்ற பெண்கள் அலறிக் கூவுகின்றனர். அப்பிடி பாகனுக்கும் அடங்காது இங்கும் அங்கும் அலேகிறது. களிற்றின்மீது சென்ற இளேஞர் தம் களிற்றைச் செலுத்திப் பெண் யானையை மடக்குகின்றனர்; அதன் மீதுள்ள மகளிரின் நடுக்கத்தைப் போக்குகின்றனர். இம் மைந்தர் செயல், பாயும் கயிறும் மரக் கூட்டமும் சிதைய அழியும் நிலேயிலுள்ள மரக் கலத்தைப் பயிலுல் திருத்தி அதில் இருப்பவரது நடுக்கத்தைப் போக்கும் கப்பலோட்டியின் செயலே ஒத்திருக்கிறது. சிலர் வெள்ளத்தில் மிதந்து விளேயாட விரும்பிப் பலவகை மிதவைகளேச் செய்து எடுத்துச் செல்லுகின்றனர்.

"வையையைச் சென்று பார்ப்பவர் கூட்டம் அதன் கரையை ஒத்திருக்கிறது. அங்குக் கூடிய மக்கள் பலவாறு பேசுகின்றனர்: 'வையை என்னும் இந் நங்கை ஆண்டுதோறும் தவருமல் வந்து நம்மைக் காக்கின்ருள். அதனுல் இவளே "வையை என்னும் பொய்யாக் குலக்கொடி" என்று புலவர்

பாராட்டுகின்றனர்,' என்று சிலர் கூறுகின்றனர். வேறு சிலர், 'நமது பாண்டியனது குளிர்ந்த அருளைப் போல இந்நீர் குளிர்ந்து காணப்படுகிறது. நீர் இல்லையாயின் உயிர்கள் வாழ்தல் எங்கே?' என்று பேசிக்கொள்கின்றனர். வேறிடத்தில் சிலர், 'புது வெள்ளத்தில் பெண்யானைகளின் மேல் ஏறிச் செல்லும் அக் காதலரைப் பாருங்கள்,' என்று சுட்டிக் காட்டிப் பேசுகின்றனர். மற்றொருபால், 'வெள்ளம் ஓரளவாக இருத்தல் வேண்டும். அளவுக்கு மேற்பட்டால் வயல்கள் பாழாகும்; ஊர்கள் அழியும்; குடிசைகளில் வாழும் எளிய மக்கள் தவிக்க நேரிடும்,' என்று கவலையோடு பேசுகின்றனர். வேறோரிடத்தில் சிலர், 'பெண்கள் வையைக்கு வணக்கம் செய்வதைப் பாருங்கள். புது வெள்ளம் வந்த மகிழ்ச்சியால் அவர்தம் முகங்கள் இன்று மலர்ந்த தாமரை மலர்களை ஒத்திருக்கின்றன,' என்று மகிழ்ச்சி தோன்றக் கூறுகின்றனர்.

"துறைகள்தோறும் மகளிர் நீராடுகின்றனர். அவர்தம் உடம்பில் பூசியுள்ள குங்குமக் குழம்பும் சந்தனச் சாந்தும் கூந்தலில் பூசிய எண்ணெயும் சூடிய மலர்களும் நீரில் கலக்கின்றன. அதனால் வையைப் புதுநீர் நன்மணம் பெறுகின்றது. வையைமீது பலவகை மலர்கள் யாத்திரை செய்கின்றன. அம் மலர்கள் நீராடும் மக்களுடைய காதுகளில் ஒன்றும் பலவுமாய்த் தங்குகின்றன.

"நீராடும் மகளிர் கைகளில் வளையல்களையும் கழுத்தில் முத்து மாலைகளையும் இடையில் ஆடைக்குள் இருவடமாய் அமைந்த 'மேகலை' என்னும் அணியையும், ஆடையின் புறத்தே எட்டு வடமாய்

அமைந்த ‘ காஞ்சி ’ என்னும் அணியையும் அணிந் திருக்கின்றனர். அவர்கள் நீரில் குடைந்து ஆடு தலால் வெள்ளத்தின் வேகத்தில் இவை தத்தம் இடங்களை விட்டு அலைகின்றன. பகைவர் நிலத் திற் புகுந்து அவர்தம் பொருள்களைப் பாண்டியன் கொள்ளை கொள்ளுதல் போல, வையை ஆற்றுப் புதுப்புனல், சிலர் அணிந்திருந்த பலவகை வடங் களை இழுத்துச் செல்கின்றது.

“மகளிர் சூடிக் கழித்த மெல்லிய மலர்களும் மைந்தர் அணிந்த மாலைகளும் கரைக்கண் இருக் கும் மரங்களின் வேர்களும், சுள்ளிகளும், புல் பூண்டுகளும் காய்களும் பிறவும் ஆற்றில் மிதந்து செல்கின்றன. கள்ளுண்டு களித்த கீழ்மக்கள் பல் துலக்குகின்றனர். முன்பே சந்தனக் குழம்பு முதலியவற்ருல் வேறுபட்ட ஆற்றுநீர், மேற் சொன்ன பலவகைப் பொருள்களையும் தாங்கிப் பாய்தலால், வேதத்தில் வல்ல பெரியோர் அந்நீரில் நீராடாது செல்கின்றனர். வேறு சிலரும் அந் நீரைத் துறக்கின்றனர்.

“சிலர் நெட்டியாற் செய்த மிதவைகளைப் புது வெள்ளத்தில் செல்லவிட்டு அதன்மீது விளையாடு கின்றனர். வேறு சிலர் வாழை மரங்களைக் கொண்டு நீர்மேல் தாவிச் செல்கின்றனர். சிலர் ஓடத்தில் ஏறி நீரின் போக்கிலே செல்கின்றனர். சிலர் அக்கரைக்கு நீந்திச் சென்று மீண்டும் இக் கரைக்கு நீந்தி வருகின்றனர். வீரர்கள் தம்முள் விளையாட்டு வாட்போரும் ஈட்டிப்போரும் வெள் ளத்தில் நின்றபடியே செய்து நீரைத் தெளிவற்ற தாக்குகின்றனர். பலவகைத் தொழில்களில் ஈடு படும் சாதாரண மக்கள் ஆடவரும் பெண்டிரும்—

நீரிற் குதித்து விளையாடுகின்றனர். காதலனும் காதலியும் ஒருவர்மீது ஒருவர் தண்ணீரைத் தெளித்து விளையாடுகின்றனர். இவ்விளையாட்டி ஞல் அவர்தம் கண்கள் சிவக்கின்றன. சிறிய மனத்தாங்கலால் ஒருவரோடொருவர் பேசாதிருந்த கணவனும் மனைவியும் புனல் விளையாட்டில் இறங் கினவுடன் தம் மனக்கசப்பை மறந்து மகிழ்ச்சி யோடு பேசுகின்றனர். அங்ஙனம் பேசி மகிழ்ந்த பெண்கள் வையையை நோக்கி, 'வையாய், நின் ஞல் இம்மூதூரில் வாழ்வார்க்கு இன்பமும் பொலி வும் மிகுந்த அளவில் உண்டாயின ஆதலால் அகன்ற இடத்தை உடையதாயினும் இவ்வுலகம் நினது புகழை அடக்கமாட்டாது. நீ வாழ்வா யாக!' என்று வாழ்த்துகின்றனர். ஆடல் பாடல் களில் வல்ல மாதவியை ஒத்த செல்வ மகளிர் சிலர் தத்தம் காதலருடன் பெண்யானைகள்மீது இருந்த படி புது வெள்ளத்தைக் கடக்கின்றனர். சிலர் இக் கரையில் விளையாடுகின்றனர். பலர் அக்கரை சென்று புனல் ஆடுகின்றனர். நீராடிக் கரை யேறிய பிறகு அவருட் சிலர்—ஆடவரும் பெண் டிரும்—கள்ளுண்டு களிக்கின்றனர்; நாட்டையும் தம்மையும் வாழ்விக்க வந்த வையைக்கு வாழ்த்துக் கூறுகின்றனர்.

"வேருெரு பக்கம் செல்வ மகளிரும் ஆடல் பாடல்களிற் சிறந்த மகளிரும் புதுப்புனல் ஆடி மகிழ்கின்றனர்; கரையில் உள்ள சோலைகளை அடைந்து, தம் கூந்தல்மேல் வெண் துகிலைச் சுற்றி முறுக்கி ஈரம் போக்குகின்றனர்; கூந்தலில் உள்ள ஈரத்தை அகிற் புகையிற் போக்குகின்றனர். அப் புகை நாலாப் பக்கங்களிலும் பரவி நறுமணம்

விளக்கின்றது. பின்னர் அம் மகளிர் வையைக்கு வழிபாடு இயற்றுகின்றனர்; தாம் கொண்டுவந்த பொன், வெள்ளி முதலியவற்ருல் செய்வித்த மீன், நண்டு, இருல் முதலியவற்றை நீரில் செல்லவிடுகின் றனர். வறியவரிடம் பொருள் இன்மையை நோக்கி அவர், 'ஈ' என்பதைச் சொல்லுதற்கு முன்பே அறத்தை விரும்பி அவ்வேழைகள் விரும்பும் தானங்களைச் செய்கின்றனர். பாடல் மகளிர் புதுப் புனலை வாழ்த்திப் பாடுகின்றனர். அப்போது யாழ் வாசிக்கப்படுகிறது. முழவு, மத்தரி, தடாரி, தண்ணுமை என்னும் வாத்தியங்கள் ஒலிக்கின்றன. ஆடல் மகளிர் பாடலுக்கேற்ப மெய்ப்பாடுகளைக் காட்டி ஆடுகின்றனர். சில இடங்களில் பாணர் களும் பாடி ஆடுகின்றனர். இங்ஙனம் மைந்தரும் மகளிரும் ஆடிப்பாடி, 'வறுமையால் துன்புறும் புலவரது ஏற்ற கை நிறையப் பொன்னைச் சொரி யும் பாண்டியனைப் போலவே வையை வயலின்கண் பொன்னைப் பரப்பும் இயல்பு மாருது ஒழிக! அஃது எல்லா உயிர்கட்கும் நன்மை செய்வதாக', என்று வையையை வாழ்த்தி அகமகிழ்ச்சி கொள்ளுகின் றனர்.

"பனி மிகுதலால் குளிரால் நடுங்குதலையுடைய முன் பனிப் பருவத்தில் மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் தம் தாய்மாருடன் வைகறையில் வையைக்குச் சென்று நீராடுகின்றன்ர். அவர்கள் மார்கழி நோன்பை மேற்கொள்கின்றனர். அந் நோன்பு நோற்கும் முறைமையைச் சடங்கு அறிந்த முதிய பார்ப்பனிமார் காட்டுகின்றனர். விடியற் காலையில் குளிர் வாடை வீசுதலால் கன்னி யர் வையைக் கரையில் அந்தணர் வளர்த்துவரும்

தீயினிடம் சென்று குளிரைப் போக்குகின்றனர். நோன்பு இயற்றும் அக்கன்னியரை அந்தணர் ஆசீர்வதிக்கின்றனர்.

"மார்கழி மாதத்தில் நீராடுகின்ற முதிய வாழ்வரசிகள், 'எம் கணவரும் யாமும் கிழவர் கிழவியர் எனப்படாமல் நிலையுறுதலையுடைய இளமையை இத் தைந்நீர் ஆடும் தவம் தரச் செல்வத்தோடும் சுற்றத்தோடும் நிலைபெறுக,' என்று கூறுகின்றனர். தைந்நீர் ஆடும் கன்னிப் பெண்கள் வையையை நோக்கி, 'இனிய பரிபாடலை உடைய நறுநீர் வையாய், மின்னல் போன்ற இழையையும் நறுநுதலையும் உடைய மக்கள் தன்மை மேம்பட்ட கன்னிமை முதிராத யாங்கள், நின்னிடத்து இத் தைந் நீராடலை முற்பிறப்பிற் செய்த தவத்தாலே இப்பிறப்பிற் பெற்றேம். அதனை யாவரும் நயக்கத்தக்க முறையில் மறுபிறப்பினும் பெறுவோமாக,' என்று கூறி மகிழ்கின்றனர். பின்னும் சில மகளிர், 'வையாய், மைந்தரும் மகளிரும் தம் பொருள்களைத் தானம் பண்ணி அதன் பயனாகிய போகத்தை நுகர விரும்பி, நாள்தோறும் உன்னிடம் நீராடுகின்றனர்; கையுறையாகப் பொன்மீன் முதலியனவும் அவர் அணிந்த சாந்து மாலையும் உண்டியும் நினக்குத் தருகின்றனர். ஆதலால் மழை வளம் சுரப்பதாக! அதனால் வெள்ளம் பெருகி நின் வளம் குறையாதிருப்பதாக!' என்று வாழ்த்துக் கூறுகின்றனர்."

## சிலப்பதிகாரத்தில் வையை

கோவலனும் கண்ணகியும் மதுரையில் வாணிகம் செய்து பிழைக்க விரும்பிக் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து நடந்து சென்று மதுரையை நெருங்கினர். அவர்களுடன் கவுந்தியடிகள் என்ற தவ மூதாட்டியார் ஒருவர் சென்றார். அவர்கள் வையை ஆற்றைக் கடந்துதான் மதுரைக்கு வரவேண்டிய நிலையில் இருந்தனர். அப்பொழுது வையை எவ்வாறு இருந்தது என்பதை இளங்கோவடிகள் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் கீழ்வருமாறு கூறியுள்ளார் :

"வையை ஆற்றுக் கரைகளின் வெளிப்புறம் எங்கும் குரவு, மகிழ், கோங்கு, வேங்கை, வெண் கடம்பு, சுரபுன்னை, மஞ்சாடி, செருந்தி, சண்பகம், பாதிரி முதலிய மரங்கள் வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்திருக்கின்றன. இவற்றின் மலர்கள் வையை ஆற்று நீரில் விழுந்து நீரை மூடிய வண்ணம் மிதந்து செல்கின்றன. அக்காட்சி, வையை என்னும் மங்கை நல்லாள் பூந்துகில் உடுத்தியிருந்தாற் போல இருந்தது.

"இரு கரைகளின் உட்பகுதிகளில் குருக்கத்தி, செம்முல்லை, முசுட்டை, மோசி மல்லிகை, வெள்ளை நறுந்தாளி, வெட்பாலை, மூங்கில், இவற்றிற் படர்ந்த குட்டிப்பிடவம், இருவாட்சி ஆகிய அனைத்தின் மலர்களும் விரிந்திருந்தன. இப்பூங்கொடிகள் வரிசையாக நெருங்கிப் படர்ந்து இருந்தமை, வையை என்னும் நங்கை இடையில் அணிந்த மேகலை என்னும் அணியாகக் காட்சி அளித்தது. ஆற்றின் இடையிடையே மணற்குன்று

கள் இருந்தன. கரைகளில் இருந்த முருக்க மரங்களிலிருந்து செந்நிற மலர்கள் சிந்திக்கிடந் தன. அக்காட்சி, வையையாகிய மடந்தையின் சிவந்த வாய் என்று சொல்லும்படி இருந்தது. ஆற்று நீரோடு இடையறுது வந்துகொண்டிருந்த முல்லை அரும்புகள் அந்நங்கையின் பற்களை ஒத் திருந்தன. ஆற்றின் குறுக்கிலும் நெடுகிலும் திரிந்துகொண்டிருந்த கயல் மீன்கள் வையை என்னும் பெண்ணரசியின் கண்களாகக் காட்சி அளித்தன. ஆற்றின் இரு பக்கங்களிலும் அலைகள் அரித்த மணமலர் நீங்காத கருமணல் அப் பெண் மணியின் கூந்தலாக விளங்கியது.

"வையை என்னும் மங்கை நல்லாள் உயிர் களைப் பாதுகாப்பதற்குப் பல பொருள்களையும் விளைத்துத் தரும் ஒழுக்கத்தினை உடையவள். அவள் தன்னைச் சேர்ந்தவர்க்குத் தனது நன்னீ ரால் எல்லையற்ற இன்பத்தைக் கொடுப்பதால் திரு மகளை ஒப்பவள்; புலவரால் ஏத்தெடுக்கப் பெற்ற வள். பருவம் பொய்யாமையாலும் வேற்று வேந்தர் அணுகாமையாலும் பாண்டியர் குலக்கொடியாக இருப்பவள்.

"வையை ஆற்று வடகரையிலிருந்து தென் கரைக்கு மக்களை ஏற்றிச் செல்லக் குதிரைமுக ஓடங்கள், யானைமுக ஓடங்கள், சிங்கமுக ஓடங்கள் என்பன இருந்தன. இவை மிக்க ஆழத்தில் செல் லத்தக்கவை. இவற்றிற்குச் சிறிது அப்பால் வேறு தெப்பங்களும் இருந்தன. அவற்றுள் ஒன்றில் கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளும் ஏறித் தென்கரையை அடைந்தனர்."

# திருவிளையாடற் புராணத்தில் வையை

## (1)

மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஆண்டுவந்த மலையத்துவச பாண்டியனால் வளர்க்கப்பட்ட உமாதேவியரான தடாதகைப் பிராட்டியார் சிவபெருமானை மணக்க விரும்பினார். சிவபெருமான் மனித உருவில் சுந்தரபாண்டியனாக வந்து பிராட்டியாரை மணந்து கொண்டார். அத் திருமணத்திற்கு வந்தவர் அனைவரும் திருமண விருந்தினை விலாப்புடைக்க உண்டு மகிழ்ந்தனர். ஆனால், சமைத்த உணவுப் பொருள்களுள் பெரும் பகுதி எஞ்சிவிட்டது. பூத கணத்தவருள் ஒருவனான குண்டோதரன் பசி நோய் மிக்கவன். எஞ்சிய உணவுப் பொருள்களைத் தின்று பசியாறும்படி சிவபெருமான் அவனை ஏவினார். அவன் எல்லாவற்றையும் உண்டான். நீர் வேட்கை மிகுந்தவனாய் மதுரையைச் சுற்றியிருந்த கிணறுகள், ஓடைகள், குளங்கள் இவை வரளும்படி நீரைக் குடித்தான்; ஆயினும் வேட்கை தணியவில்லை. அவனது வேட்கையைத் தணிக்க விரும்பிய சிவபெருமான் கங்கை ஆற்றை மதுரையின் மதிற்புறத்தில் ஓடும்படி கட்டளையிட்டார்.

கங்கை சிவபெருமானை நோக்கி, "நான் முன்னொரு காலத்தில் உனது ஆணைப்படி பகீரதன் பொருட்டுக் கங்கை என்னும் பெயருடன் பாய்ந்து வந்தேன்; அதில் நீராடுவோர் களங்கத்தைப் போக்கினேன். இன்று என்னைப் புதிய ஆறாக உருவெடுக்கும்படி கூறினை. யான் உருவெடுக்கும்

புதிய ஆற்றைக் கண்ணுற் கண்டவர், மூழ்கி நீராடியவர், நீரைக் கையால் தொட்டவர் ஆகியோருக்கும் பிறவித் தொடர்பற்று நீங்க உள்ளத்தில் மகிழ்ச்சி உண்டாதல் வேண்டும்; அன்பும் மெய்ஞ் ஞானமும் உன்னை உணரும் அறிவும் அவர்கட்கு உண்டாதல் வேண்டும். இவற்றை அவர்களுக்கு யான் தருமாறு நீ அருள் புரிவாய்,'' என்று வேண்டினாள். சிவபெருமானும் அவ்வாறே அருள் புரிந்தார்.

வரம் பெற்ற கங்கை அளவற்ற வேகத்துடன் எழுந்து பெரிய ஆற்று வடிவாய் வானத்திலிருந்து இறங்குபவள்போல் வரலானாள். அவள் ஆற்றின் வடிவமாக வந்த பொழுதும் அவளது பெண் வடிவம் மாறவில்லை. அலைகள் வளையணிந்த கைகளைப் போல இருந்தன. வெள்ளத்தில் வந்த முத்துக்கள் அவளுக்கு அமைந்த முத்து மாலைகளாகக் காணப் பட்டன. வெள்ளத்தில் தோன்றிய நுரைகள் அவளுடைய ஆடைகளாகக் காட்சியளித்தன. ஆற்றில் மிதந்து வந்த பூங்கொடிகள் கங்காதேவியின் இடையைப் போலக் காட்சியளித்தன. ஆற்றில் தோன்றிய கருமணல் அவளது கூந்தலை ஒத்திருந்தது. வெள்ளத்தில் பிறழ்ந்து சென்ற வாளை மீன்கள் அவள் கண்களை ஒத்திருந்தன.

இங்ஙனம் வந்த புதிய ஆறே வையை என்பது. அது மிக்க விரைவினை உடைய பெருங் காற்றைப்போல வந்துகொண்டிருந்தது. அப் பேராறு மணம் பொருந்திய அகிலையும் வேங்கை மரத்தையும் வேரோடு பறித்தது; வேட்டுவர்களின் சிற்றூர்களை அடியோடு பெயர்த்தது. பெண் மானோடு ஆண் மானையும் குரங்குகளையும், அக்

குரங்குகள் உலாவி வந்த மரங்களையும் தினைப் புனப் பரண்களையும் வெள்ளம் இழுத்துச் சென்றது. பேரியாற்று அலைகள் பெரிய மலைகளை மோதின; பள்ளங்களை மேடாக்கின; வெள்ள நீர், மேகத்தை ஊடுருவிய கிளைகளைக் கொண்ட மரங்களைக் கரை இடிந்த இடந்தோறும் தலைகீழாக நட்டுக்கொண்டே சென்றது.

மிக்க வேகத்தையுடைய அப்பேரியாறு மண்ணைத் தோண்டிச் சென்றதால் வராக மூர்த்தியை ஒத்திருந்தது; தயிர்ச் சட்டிகளையும் வெண்ணெய்ச் சட்டிகளையும் வாரிக்கொண்டு வந்ததால், அவ்விரண்டின்மீதும் பெருவிருப்பம் கொண்ட கண்ணபிரானை ஒத்திருந்தது. இங்ஙனம் பெருக்கெடுத்து வந்த வையை ஆற்றில் யானைகள், குதிரைகள், சாமரைகள், முத்துக்கள் என்பன மிதந்து வந்தன. இக்காட்சி, பகையரசரை வென்று அவர்தம் பொருள்களோடு தன் மதுரையம்பதிக்கு மீண்டு வந்த பாண்டிய வேந்தனை ஒத்திருந்தது. அவ்யாற்றில் ஆத்தி மாலைகளும், பனம்பூ மாலைகளும், வேப்ப மாலைகளும் மிதந்து வந்தன. அவற்றோடு புலிகளும் வேடர்களுடைய விற்களும் வந்தன. ஆங்காங்குக் கயல் மீன்கள் துள்ளிக் குதித்தன. இக்காட்சி, புகழ் மிகுந்த தமிழ் வேந்தராகிய சேர, சோழ, பாண்டியர் மூவரும் கூடிப் பல செல்வங்களோடு வந்ததனை ஒத்திருந்தது. நூல்களை முறைப்படி கல்லாதவர் இயற்றிய செய்யுள்கள் தெளிவின்றிக் கலங்கி நிற்றல் போல, வையை ஆற்று நீர் முதலிற் கலங்கியிருந்தது. பல கலைகளிலும் வல்ல புலவர் இயற்றிய செய்யுள் நுட்பமான பொருளை உடையதாய்த்

தெளிந்து அனைவரும் விரும்பிப் பயன் பெறுமாறு போலப் பெரிய நீர்த்துறைகள் காணப் பொருந்தி, சென்ற இடந்தோறும் மணி பொன் முதலிய பொருள்களை உடையதாய், ஆழம் உடையதாகிப் பின் தெளிவடைந்து, எல்லோரும் விரும்பிப் பயன் பெறுமாறு நிலைபெற்றது.

இங்ஙனம் மிக்க விரைவுடனும் சிறப்புடனும் வந்த வையை ஆற்று நீரைக் குண்டோதரன் தனது நீர் வேட்கை தணியும்படி குடித்து மகிழ்ந்தான்.

(2)

அரிமர்த்தன பாண்டியன் மதுரையை ஆண்டு வந்த பொழுது மாணிக்கவாசகர் அவரிடம் முதலமைச்சராக இருந்துவந்தார். அவர் பாண்டியன் ஏவலால் குதிரைகள் வாங்கத் திருப்பெருந்துறைக்குச் சென்றார். அங்குச் சிவபெருமான் குரு வடிவில் வந்து அவருக்கு உண்மை ஞானத்தை உபதேசித்தார். சிவபக்தியில் ஈடுபட்ட மாணிக்கவாசகர் குதிரை வாங்கக் கொண்டுசென்ற பொருளைக்கொண்டு பெரியதோர் கோயில் கட்டிச் சிவபெருமானை வழிபடத் தொடங்கினார். இதனை உணர்ந்த பாண்டியன் அவர்மீது சீற்றம் கொண்டான். சிவபெருமான் காட்டில் இருந்த நரிகளைப் பரிகளாக்கித் தாம் குதிரைச் சேவகனாகப் பாண்டியனிடம் சென்றார்; 'மாணிக்கவாசகர் வாங்கிய குதிரைகள் இவை,' என்று பரிகளைக் காட்டி மறைந்தார். அப்பரிகள் இரவில் நரிகளாகி ஊளையிடத் தொடங்கின. பாண்டியன் மிக்க சீற்றம் அடைந்து மாணிக்க வாசகரைத் தண்டிக்கலானான். தண்

டனையைப் பொறுக்க முடியாத மாணிக்க வாசகர் சிவபெருமானை நோக்கி முறையிட்டார். சிவபெரு மான் மாணிக்க வாசகரது பெருமையை அரச னுக்கு உணர்த்த விரும்பி, வெள்ளப் பெருக் கெடுத்து வருமாறு வையையை ஏவினார். உடனே வையையாறு வெள்ளப் பெருக்குடன் வந்தது.

முன்னொரு காலத்தில் காஞ்சிப் பதியில் மண லால் சிவலிங்கத்தை அமைத்து உமாதேவி வழி பட்டபோது, அவ்வழிபாட்டை அழிக்கச் சிவபெரு மானால் ஏவப்பட்ட கம்பை ஆறு பெருகி வந்தாற் போல, வையை ஆறு மிக்க செலவுடன் வந்தது. வெள்ளப் பெருக்கம், வரிசையாய் இருந்த பாக்கு மரங்களின் பழக்குலைகள் அறும்படி விரைந்து சென்றது; கரைகள் உடையும்படி குத்திச் சென் றது; பழங்கள் சிதறும்படி மரக்கிளைகளைக் கீழே வீழ்த்திச் சென்றது; கரும்புகளையும், வாழை மரங் களையும், முற்றி விளைந்த நெற்கதிர்களையும் வேருடன் வீழ்த்திச் சென்றது. அவ்வெள்ளம் ஆயிரம் செந்தாமரை மலர்களைப் பரப்பிக்கொண்டு வந்தது; மணிகளையும் மலர்களையும் உடைந்த கரையின்கண் சிதறச் செய்தது; காஞ்சி மரங் களையும், சங்குகளையும் பக்கங்களில் வீசியது.

அவ்யாற்றில் குறிஞ்சி நிலத்து மதுவும், முல்லை நிலத்து நெய்யும் பாலும் தயிரும், மருத நிலத்துக் கருப்பஞ்சாறும், நெய்தல் நிலத்து உப்பாறும் கலந்தன. வெள்ள நீர் 'கல்' என்று ஒலித்தது; காவலையுடைய வானளாவிய மதிலின் புறத்தே சென்று பல இல்லங்களையும் சிறிய குடிசைகளையும் கீழ் மேலாகத் தள்ளி, அவற்றைச் சுமந்து சென் றது அங்ஙனம் வீடுகளும் குடிசைகளும் மிதந்து

சென்றமை, கடலில் நாவாய்களும் தோணிகளும் செல்வது போன்ற காட்சியை அளித்தது. வெள்ள நீர் சில இடங்களில் மதிலேயும் தள்ளி உள்ளே சென்றது. அங்ஙனம் சென்ற நீர் கடைத் தெரு விலும், பிற தெருக்களிலும் அம்பலங்களிலும் தாவி வந்தது. அதைக் கண்டு மதுரைக் குடிகள் அஞ் சினர்கள். அவருட் சிலர் தம் பிள்ளைகளை எடுத்துக் கொண்டு ஓடினர்; சிலர் தம் குழந்தைகளைக் காணுமல் அழுதனர்; சிலர் தம் மனைவியரை. அழைத்துக்கொண்டு உயிர் தப்ப ஓடினர். வேறு சிலர் புகலிடம் காணுது தவித்தனர். சிலர் தம் உடைமைகளைப் பத்திரப்படுத்தினர். வேறு சிலர் தம் உடைமைகளை அப்படியே விட்டு ஓடினர். சிலர் உயர்ந்த மாடங்கள்மீதும் மாளிகைகள்மீதும் ஏறிக்கொண்டனர்.

இங்ஙனம் வந்துகொண்டிருந்த பெரிய வெள் ளத்தினைத் தடுக்க விரும்பிய பாண்டியன், குடி களைக் கொண்டு கரைகளை உயர்த்தும்படி அமைச் சர்களுக்கு ஆணையிட்டான். அவ்வமைச்சர் குடி களை ஆராய்ந்து எடுத்து, அவர்கள் பெயர்களை எழுதித் தொகை முடிவு கட்டினர்; ஆற்றங்கரையை அளவுகோல் போட்டு அளந்து, கோடு கிழித்து வரையறுத்தனர்; குடிகள் அமர்த்தின கூலியாட் களை அவரவர்க்கு அளந்து வரையறுத்தபடி கரையை உயர்த்துமாறு ஆணையிட்டனர். உடனே கரையின்கண் வேலையாட்கள் மொய்த்தனர். சிலர் மண் வெட்டும் கருவியுடன் கூடையும் கொண்டு வந்தனர்; சிலர் மரங்களைச் சுமந்து வந்தனர்; சிலர் பச்சைத் தழையையும் வைக்கோலையும் சுமந்துகொண்டு வந்தனர். இவ்வாறு தண்ணீரை

முகந்து குடிப்பதற்கு வரும் மேகக் கூட்டம் போலக் கூலியாட்கள் வையைக் கரையில் கூடினர். வேலையாட்கள் மரங்களைக் குதிரைப் பாய்ச்சலாக நிறுத்தினர்; வைக்கோல் முதலியவற்றைப் பாம்பு போல் நீட்டி உருட்டி, நிறுத்திய மரங்களின் அடியிற் கிடத்தினர்; நீண்ட தழைகளை இட்டு நிரப்பினர்; மணலை வெட்டி எடுத்துச் சென்றனர்; கரைமீது மணலைக் கொட்டிப் பரப்பினர்.

இங்ஙனம் ஒருவாறு கட்டிமுடித்த கரையை உடைப்பதற்கு வெள்ள நீர் விரைந்து வந்ததைக் கண்டு வேலையாட்கள் உள்ளம் கலங்கினர். அவருட் சிலர், 'வையைத் தாயே, எங்கள்மீது எல்லையில் லாத கோபம் எதற்கு? நின் கோபம் தணிவதாக', என்று கூறி வணங்கி, மேலும் மணலைக் கொட்டி னர்; உடைப்பு அடங்கியதைக் கண்டு மகிழ்ச்சிப் பெருக்கால் குரவை ஆடினர். இவர்தம் வேலைகளை மேற்பார்க்கக் கோலைக் கொண்ட கையினராய்ப் பலர் இருந்தனர். அவர்கள், நீண்ட அலைகள் ஒதுங்கி ஓடும்படி மலைபோல் உயர்த்திக் கட்டிய கரையின் பகுதிகளைப் பார்த்துக் கணக்குடன் ஒத்திருத்தலைக் கண்டு மகிழ்ந்து சென்றனர்; தம் வேலையைச் செய்யாது சோம்பி இருந்த கூலியாட் களை ஒறுத்து வேலை வாங்கினர்.

மதுரையை ஆண்ட பாண்டிய மன்னருள் நெடுமாறன் என்பவன் ஒருவன்: இவனுக்கு முதுகு கூனிருந்த காரணத்தால், 'கூன் பாண் டியன்' என்ற பெயரும் வழங்கி வந்தது. இவன் மனைவியார் பெயர் மங்கையர்க்கரசியார் என்பது. அவர் சோழர் மரபில் வந்தவர். நெடுமாறன் சமண சமயத்தைத் தழுவியிருந்தான். மங்கையர்க்

கரசியாரோ சிறந்த சிவபக்தராக இருந்தார். தம் கணவரை எவ்வாறேனும் சைவராக்க வேண்டும் என்று அம்மையார் இறைவனை நாளும் வேண்டினர்.

ஒருநாள் திடீரென மன்னனுக்குக் கடுமையான காய்ச்சல் வந்துற்றது. சிறந்த பல மருத்துவர்கள் முயன்றும் மன்னனின் காய்ச்சலைப் போக்க முடியவில்லை. இந்நிலையில் சைவசமய குரவருள் ஒருவரான திருஞானசம்பந்தர் மதுரைக்குச் சென்றுர். ஞானசம்பந்தர் மன்னனின் நோயை மட்டும் போக்கியதோடு அமையாது, அவன் கூனையும் போக்கினர். சமணருள் எவராலும் செய்தற்கரிய செயலை ஞானசம்பந்தர் செய்து முடித்தமையின், மன்னன் அவர்பால் பேரன்பு கொண்டான்; சைவ சமயத்தைத் தழுவினன். இந்நிகழ்ச்சி நகரில் பரப்பரப்பை உண்டுபண்ணியது. சமணம்-சைவம் இரண்டனுள் சிறந்தது எது என்ற கேள்வி எழுந்தது. இரு சமயத்தாரும் தம் மதங்களின் சிறந்த கருத்துக்களைத் தனித் தனியே பனையோலைகளில் எழுதித் தீயிலிடின் வெந்து போவது தாழ்ந்தது என்றும், தீயினுல் சுடப்படாது இருப்பதுதான் உயர்ந்தது என்றும் முடிவு செய்துகொண்டனர்; அவ்வாறே ஓலைகளைத் தீயிலிட்டனர். சமண கருத்துக்கள் அடங்கிய ஓலைகள் வெந்து சாம்பராயின. சைவசமயக் கருத்துக்கள் அடங்கிய ஓலைகள் இட்டவாறே இருந்தன. இந்நிகழ்ச்சியாலும் சமணர் அமைதியுறவில்லை; முன்னர்ச் செய்தபடியே இரண்டு சமயங்களின் கருத்துக்களையும் தனித்தனியே ஓலைகளில் எழுதி வையையாற்றில் போட்டவுடன் ஆற்றின் போக்கை

எதிர்த்து இருப்பதுதான் உயர்ந்தது என்றும், ஆற்றின் போக்கோடு இயைந்து செல்வது உயர்ந்த தாகாது என்றும் கூறினர். இரு சமயத்தாரும் ஆற்றில் ஓலைகளை இட்டனர். சைவசமய ஏடுகள் ஆற்றின் போக்கை எதிர்த்துச் சென்றதைக் கண்டு சமணர் வெட்கினர். பின்னர் ஏடுகளைத் தேடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. வில்வ மரங்கள் அடர்ந்த சூழலில் ஏடுகள் காணப்பட்டன. புதிதாக ஒரு இலிங்கமும் அங்கு இருந்தது. மன்னன் ஏடுகளையும் இலிங்கத்தையும் கண்டு மகிழ்ந்தான்; இலிங்கத்தை உள்ளடக்கி அழகிய ஒரு கோவிலைக் கட்டி முடித்தான். இக்கோவிலே திருவேடகம் (திரு+ஏடு+அகம்) எனப்பட்டது. இத் திருக்கோவிலுக்குப் பின்புறமாக வையையாறு பாய்கின்றது. சம்பந்தர் பாடிய பதிகம் மட்டும் இத்தலத்திற்கு உண்டு.

# 5. வையைக்கரை ஊர்கள்

வருஷநாடு–ஆண்டிப்பட்டி மலைத்தொடரில் தோற்றமாகும் வையையாறு மதுரைமாவட்டத்தில் பெரியகுளம் தாலூகா, நிலக்கோட்டை தாலூகா, மதுரைத் தாலூகாக்களில் பாய்ந்து, இராமநாதபுரம் மாவட்டத்திலும் பாய்ந்து இராசமங்கலம் ஏரியிற்கலக்கின்றது. இவ்யாற்றின் கரையில் அமைந்த சிற்றூர்கள் பல. குறிப்பிடத்தக்க பேரூர் **மதுரை** ஒன்றேயாகும். சிற்றூர்களிலும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை குலசேகரன் கோட்டை, கொடைமங்கலம், மேட்டுப்பட்டி, சோழவந்தான், திருவேடகம், திருப்பூவணம் என்பன.

## குலசேகரன் கோட்டை

குலசேகரன் கோட்டை என்னும் ஊர் நிலக்கோட்டை தாலூகாவில் உள்ளது. இது மதுரைக்கு வடமேற்கே ஐந்துகல் தொலைவில் வையையாற்றை அடுத்து அமைந்துள்ளது. மதுரைக்குத் தென் கிழக்குப் பகுதியிலுள்ள அனுப்பானடி என்னும் ஊரின் இடுகாட்டில் மண்ணாலான கல்லறைகள் மிகுந்துள்ளன. கல்லறைகளில் மூடியுடன் கூடிய ஜாடிகள் புதைக்கப்பட்டுள்ளன. அவை நிலமட்டத்திற்கு மேலாகத் தெரிந்து, பார்ப்பதற்கு ஒன்றேபோல் ஒழுங்காக அமைந்துள்ளன. உயர் திரு. ரீ என்பவரால் 1887-ஆம் ஆண்டு அவற்றுள் ஒன்று தோண்டி எடுக்கப்பட்டது. தோண்டி எடுக்கப்பட்ட அந்த ஜாடி ஓரடி இரண்டரை அங்குலம் சுற்றளவும் ஓரடி ஏழு அங்குல ஆழமும் உடையதாக இருந்தது. அந்த ஜாடியுள் மனித

உடலின் எலும்புகளும் சிறிய பல பொருள்களும் இருந்தன. சில ஜாடிகள் பெரியனவாகச் செம் மண்ணால் செய்யப்பட்டிருந்தன. கருமணல் செம் மணல் ஆகியவற்ருலும் சில சிறிய ஜாடிகள் அமைக்கப்பட்டிருந்தன. இங்ஙனம் அமைந்த கல்லறைகள் அனுப்பானடியில் மட்டுமல்லாமல் குலசேகரன் கோட்டைக்கு அருகில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### கொடி மங்கலம்

கொடிமங்கலம் மதுரைக்கு வடமேற்குப் பகுதியில் எட்டுக்கல் தொலைவில் உள்ளது. இவ்வூர் நாகமலைக்கும் வையையாற்றுக்கும் இடைப்பட்ட தாய் அமைந்துள்ளது. இங்குள்ள சிவன் கோவி லில் கல்வெட்டுக்கள் பல உள்ளன. பல ஆண்டு கட்கு முன்னர்க் கோவிலைப் புதுப்பித்தபோது கற்கள் மாற்றி மாற்றி அமைக்கப்பட்டமையின் கல்வெட்டுக்களைச் சரியாகப் படித்துணர்தல் முடியவில்லை.

### மேட்டுப்பட்டி

வையையாற்றின் தென்புறக் கரையின்மீது அமைந்துள்ள கிராமமே மேட்டுப்பட்டி என்பது. இவ்வூர் நிலக்கோட்டைக்குத் தெற்கில் ஆறுகல் தொலைவில் அமைந்துள்ளது. பேரணையின் ஒரு பகுதி இக்கிராம எல்லைக்குள் அடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. மேட்டுப்பட்டியினின்று ஒரு கல் தொலைவில் சித்தர்மலை என்ரெரு மலை உள்ளது. இம்மலையின் உச்சியில் சிவாலயம் உள்ளது. மலையின் தென் பகுதியின் ஒருபுறத்தில் காலடிகள் பல காணப்படுகின்றன. இவை இங்

குள்ள மக்களால் 'பஞ்ச பாண்டவர் காலடிகள்' என்று கூறப்படுகின்றன. அவற்றுக்குச் சிறிது தொலையில் கற்பாறையில் படுக்கைகள் போன்று அமைந்துள்ள ஐந்து அமைப்புக்கள் இருக்கின்றன. இவை 'பஞ்ச பாண்டவர் படுக்கைகள்' என்று பாமரமக்கள் கூறுகின்றனர். "இவை பாண்டவர் படுக்கைகள் அல்ல; பல நூற்றுண்டுகளுக்கு முன்பு அங்கு வாழ்ந்த சமண முனிவர்கள் பயன் படுத்திய படுக்கைகளாகும். இவ்வாறே எல்லா மலைகளிலும் காணப்படும் படுக்கைகள் சமண முனிவர் அல்லது பௌத்த முனிவர்கள் பயன் படுத்தியவை எனக் கொள்க," என்று ஆராய்ச்சி அறிஞர் கூறுவர்.

**சோழவந்தான்**

மதுரைக்கு வடமேற்குப் புறமாய்ப் பன்னிரண்டு கல் தொலைவில் வையையாற்றங் கரையில் சோழவந்தான் அமைந்துள்ளது. முள்ளிப்பள்ளம், தென்கரை என்ற இரண்டு ஊர்களும் சோழவந்தானைச் சேர்ந்தவை.

இவ்வூரின் பழைய பெயர் சோழாந்தகச் சதுர்வேதி மங்கலம் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. சோழாந்தகன் என்பதற்குச் 'சோழற்கு அந்தகன்', அதாவது 'சோழர் தம் அழிவிற்குக் காரணமானவன்' (சோழர்க்கு எமன்) என்பது பொருள். இது சோழனை வென்ற பாண்டியன் வைத்துக்கொண்ட விருதுப் பெயராகும். இப்பெயரே நாளடைவில் 'சோழவந்தான்' என மருவியது. மதுரையை ஆண்ட விசுவநாத நாயக்கரின் அமைச்சரான தளவாய் அரியநாத முதலி

யார் தமது இனத்தைச் சார்ந்த (தொண்டைமண்டல வேளாளர்) பலரைக் காஞ்சியிலிருந்து சோழவந்தானுக்குக் குடியேற்றினர்; புதிதாகக் குடியேறியவர்க்கென்று 300 வீடுகளையும் கட்டித் தந்தார். மக்கள் இறை வழிபாட்டில் சிறந்து விளங்க வேண்டுமென்ற பெரு விழைவோடு கோவிலொன்றும் கட்டப்பட்டது. இம்மக்கள் தம் வழியினர் இன்றும் சோழவந்தானில் உள்ள 'முதலிக் கோட்டை' என்னும் ஒரு பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். மதுரையிலிருந்து திண்டுக்கல் செல்லும் பாதையில் இக்கோட்டை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. 1757-ஆம் ஆண்டு ஹைதர் அலி என்னும் ஆற்றல் மிக்க மன்னர் எவ்வித எதிர்ப்பும் இல்லாது இக்கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டு, மதுரையை நோக்கிப் படையெடுத்தார்.

சோழவந்தான் பல நூற்றாண்டுகளாக யாத்ரிகர்கள் தங்குதற்குரிய இடமாக இருந்தது. இங்கு இராணி மங்கம்மாள் கட்டிய சத்திரம் ஒன்று உள்ளது. அச்சத்திரம் இன்றும் 'மங்கம்மாள் சத்திரம்' என்றே வழங்கப்படுகிறது.

### திருவேடகம்

மதுரைக்கு வடமேற்குப் புறமாய்ப் பன்னிரண்டு கல் தொலைவில் வையையாற்றின் கரையில் அமைந்துள்ள மற்றொரு ஊர் திருவேடகம் என்பது. இது திருஞான சம்பந்தரால் பாடப்பட்ட பெருமையுடையதாகும். திருவேடகம் என்னும் பெயர் எவ்வாறு இந்நகர்க்கு வந்தது என்பதை முன் அதிகாரத்திற் படித்தீர்கள் அல்லவா?

**திருப்பூவணம்**

இது மதுரைக்குக் கிழக்கே வையையாற்றின் கரையில் அமைந்துள்ள பழம்பதி. இது பாண்டியன் அமைத்த பழைய மதுரை மாநகருக்குக் கிழக்கு எல்லையாகும்; மதுரையிலிருந்து இராமநாதபுரம் செல்லும் பஸ் பாதையில் அமைந்துள்ளது. இங்குள்ள சிவன் கோவில் பாடல்பெற்ற பாண்டிய நாட்டுத் தலங்கள் பதினான்கனுள் ஒன்றாகும். சொக்கநாதர் பொன்னனையாள் என்னும் தாசிக்காகச் சித்தராய் எழுந்தருளி வந்து இரசவாதம் செய்து பொன்னைக் கொடுத்தார். அவள் அப்பொன்னைக் கொண்டு சிவபெருமான் திருவுருவத்தைச் செய்வித்து வழிபட்டாள். இவ்வூருக்கு என்று '**திருப்பூவணப் புராணம்**' என்னும் பெயருடன் தலபுராணம் இருக்கின்றது. அதனைச் செய்தவர் **கந்தசாமிப் புலவர்**. '**திருப்பூவண நாதர் உலா**' என்னும் உலா நூலும் அச்சிடப்பட்டுள்ளது. பூவண நாதர் உலா வருவதற்கமைந்த தேரோடும் தெருக்களுள் ஒன்று இன்று வையையின் போக்கால் அழிந்துவிட்டது என்று ஊரார் கூறுகின்றனர். கோயில் மிகவும் பழுதுபட்ட நிலையில் உள்ளது. திருச்சுற்றில் கால் வைத்து நடக்க முடியாதபடி முட்செடிகள் நிறைந்திருக்கின்றன. மதிற்சுவரும் பிறவும் மிகவும் பழுதுபட்டுக்கிடக்கின்றன. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர். மாணிக்கவாசகரும் இத்தலத்தைத் தமது திருவாசகத்திற் குறித்துள்ளார்.

# 6. மதுரை மாநகரம்

வையைக் கரையில் உள்ள மதுரை மாநகரம் உண்டானதைப் பற்றித் திருவிளையாடற் புராணம் கீழ்வருமாறு ஒரு வரலாற்றைக் கூறுகின்றது:

இன்றுள்ள மதுரை மாநகரமும் அதைச் சுற்றியுள்ள பகுதியும் ஒரு காலத்தில் கடம்ப மரங்கள் நிறைந்த பெருங்காடாகக் காட்சி யளித்தது. அப் பெருங்காட்டின் கீழ்ப்பக்கத்தில் இருந்த மணவூர் என்பதனைத் தலைநகராகக் கொண்டு குலசேகர பாண்டியன் ஆட்சி புரிந்துவந்தான். அக்காலத்தில் தனஞ்சயன் என்ற வணிகன் மணவூரில் வாழ்ந்து வந்தான். அவன் சிறந்த சிவபக்தன்; மிக்க ஒழுக்கமுடையவன். அவ்வணிகன் ஒரு முறை மேற்கு நோக்கிச் சென்று வாணிகம் புரிந்து தன் ஊருக்கு மீண்டும் வந்துகொண்டிருந்தான்; வழியில் இருட்டி விட்டதால் கடம்ப வனத்தில் தங்கினான். அவன் தங்கிய இடத்தில் அவன் கண்களுக்கு முன்பு எட்டு யானைகளால் தாங்கப் பெற்றுச் செஞ்ஞாயிறு போல ஒளிவீசிய விமானம் ஒன்றைக் கண்டான்; அதன் பக்கத்தில் நெருங்கிப் பார்த்தான்; அவ்விமானத்தின்மேல் சிவலிங்கத்தைக் கண்டான்; களிப்பு நிறைந்த உள்ளத்தை உடையவனாய் அவ்விடத்திலேயே தங்கினான்.

அன்றிரவு அங்குத் தேவர்கள் வந்தனர்; சிவலிங்கத்தை வணங்கினர்; மிக்க மகிழ்வோடு அருச்சனை புரிந்தனர். இவை அனைத்தையும் தனஞ்சயன் பார்த்து மகிழ்வுற்றான். பொழுது விடிந்தது. தேவர்கள் மறைந்தனர். வணிகன் சிவபெருமானை வணங்கி வலம் வந்து தன் நகருக்கு மீண்டான்.

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை 600 001

மீண்ட வணிகன் பாண்டியனைக் கண்டு பணிந்து, தான் கடம்ப வனத்தில் கண்ட காட்சியை விளக்கினான்.

குலசேகர பாண்டியன் சிறந்த சைவன்; ஆதலால் வணிகன் கூறியதைக் கேட்டு மிக்க மகிழ்வும் வியப்பும் அடைந்தான். அன்றிரவு சிவபெருமான் ஒரு சித்தராகி அப்பாண்டியனது கனவில் தோன்றினார்; "வேற்படையுடைய வேந்தனே, பெரிய கடம்ப வனத்தை அழித்து அவ்விடத்தில் காவலைக் கொண்ட அழகிய நகரமொன்றை அமைப்பாயாக," என்று கூறி மறைந்தார். பாண்டியன் தான் கண்ட கனவைத் தன் அமைச்சர்க்கும் சான்றோர்க்கும் கூறி, பகலில் வணிகன்பால் கேட்டதையும் இரவில் கனவில் கண்டதையும் நினைந்து மகிழ்ந்து, கடம்ப வனத்தை நோக்கிப் புறப்பட்டான்.

பாண்டியன் தன் அமைச்சரோடு கடம்ப வனத்தினுள் நுழைந்தான்; மலர்கள் மலர்ந்த பொற்றாமரைக் குளத்தில் மூழ்கினான்; நாற்புறமும் ஒளிவீசிய பொன்னாலாகிய விமானத்தின்கண் இனிதாகக் காட்சியளித்த சிவலிங்கத்தைக் கண்டான்; அன்பு பின்னின்று தள்ளவும் இறைவனது அருட்பார்வை முன்னின்று இழுத்துச் செல்லவும் சென்று, உள்ளம் கரைந்து உருகும்படி இறைவனைப் பணிந்து துதித்தான்; அகத்தில் ஊற்றெடுத்த அன்பு இரண்டு கண்களின் வழியாகவும் பொழிவதுபோல் மகிழ்ச்சிக் கண்ணீரை உகுத்தான்.

பின்னர் அரசன் கடம்ப வனத்தை அழிக்கும்படி கட்டளையிட்டான். உடனே மரம் வெட்டும்

தொழிலாளரும் நகரை அமைக்கும் தொழிலாளரும் ஆயிரக்கணக்கில் கூடினர். எல்லா மரங்களும் வேரோடு சாய்க்கப்பட்டன; நிலம் செப்பம் செய்யப்பட்டது; பாண்டியன் அவ்விடத்தில் வட்ட மான நகரம் ஒன்றை அமைப்பது எவ்வாறு என்று தன் அமைச்சர்களோடு யோசித்துக்கொண்டிருந் தான். அவ்வமயம் சிவபெருமான் ஒரு சித்தராக அவன் முன்பு தோன்றினர். பாண்டியன் அவர் திருவடிகளை வணங்கி, அவரை அமரச் செய்தான். நூல்களில் கூறியுள்ளபடி கோவில், மண்டபம், கோபுரம், நகரம் முதலியவற்றை இன்னின்னவாறு அமைக்க வேண்டுமெனச் சித்தர் கூறி மறைந் தார்.

சித்தர் வந்து செப்பியபடியே குலசேகர பாண்டியனும் சிற்பநூல் வல்ல புலவர்களைக் கொண்டு திருக்கோயில் முதலியவற்றை அமைக்கத் தொடங்கினன். வேதம் ஓதும் பதும மண்டபம், இடைநிலை மண்டபம், வானளாவிய முடியினை யுடைய மகா மண்டபம், அறுகாற் பீடம், பலவகை வாத்தியங்கள் ஒலிக்கின்ற நிருத்த மண்டபம், இறைவன் திருவிழாக் கோலம் கொள்ளும் மணி மண்டபம், யாக சாலைகள், மடைப்பள்ளி, சுற்றி லும் வாழும் பரிவார தெய்வங்களுக்குக் கோவில் கள், இறைவனுக்கு வலப்பாகத்தில் இறைவி இருக் கத்தக்க பொன்னுலாகிய கோவில், திருமாளிகை யைக் கொண்ட திருமதில்கள், வெண்ணிற மாளிகைகள், மலைபோலும் உயர்ந்த கோபுரங்கள், முகில் உறங்கும் சுற்று மதில்கள், அகழி முதலியன அமைக்கப்பட்டன. கடைத்தெருக்கள், பலர் கூடிப் பேசும் அம்பலங்கள், தேரோடும் தெருக்கள்,

பெரிய மாளிகைகள், நெருங்கிய தெருக்கள், கவர் வழிகள், நான்கு தெருக்கள் கூடும் இடங்கள், பெரிய அம்பலங்கள், மன்றங்கள், செய்குன்றுகள், மேடைகள், கூத்தவைகள், மடங்கள், அந்தணர்க்குரிய தெருக்கள், அரசர் தெருக்கள், வணிகர்க்குரிய பெரிய தெருக்கள், வேளாளர் வாழத்தக்க தெருக்கள், கரி, பரி, தேர் இவை தங்கத் தக்க இடங்கள், கல்விச் சாலைகள், அறச்சாலைகள், தெளிந்த நீரையுடைய சிறு குளங்கள், கிணறுகள், மலர் ஓடைகள், பெரிய குளங்கள், நந்தவனங்கள், மலர்ச் சோலைகள், தோட்டங்கள் முதலியன அமைக்கப்பட்டன. இங்ஙனம் அமைக்கப் பெற்ற நகருக்கு வடகீழ்த் திசையில் பாண்டியன் அரண்மனை அமைப்புண்டது.

இவ்வாறு அமைந்த புதிய நகரத்திற்குச் சாந்தி செய்யப் பாண்டியன் விரும்பினான். அவன் விருப்பத்தை உணர்ந்த சிவபெருமான் தமது சடையில் உள்ள சந்திரகலையின் அமுதத்தைச் சிந்தினர். அவ்வமுதம் சென்று அந்நகர் முழுதும் பரவி நகரைத் தூய்மை செய்தது. இங்ஙனம் அமுதத்தால் மதுரமயமான நகரம் **மதுரை** எனப் பெயர் பெற்றது.* நகரத்தின் கிழக்குத் திக்கில் ஐயனாரும், தென்திக்கில் ஏழு மங்கையரும்,

*வையைக் கரையோரத்தில் மருத மரங்கள் மிகுதியாக வளர்ந்திருந்த துறை ஒன்று இருந்தது. அத்துறை திருமருத முன்றுறை எனச் சங்ககாலத்தில் பெயர் பெற்றிருந்தது. ஒரு காலத்தில் மருத மரங்கள் மிக்கிருந்த இடத்தில் அமைந்த காரணம் பற்றி நகரம் மருதை எனப் பெற்றது. இதுவே பிற்காலத்தில் **மதுரை** என மாறி வழங்கலாயிற்று. அங்ஙனம் பெயர் மாறினமைக்கு மேலே கூறப்பட்ட கதை சொல்லப்படுகின்றது என்று அறிஞர் சிலர் கூறுகின்றனர்.

மேற்குத்திசையில் திருமாலும், வடதிசையில் காளி யும் காவல் தெய்வங்களாக நிறுத்தப் பெற்றனர். சிவபெருமான் கோவிலில் விதிப்படி பூசை நடத் துவதற்கென்று பாண்டியன் ஆதிசைவர்களைக் காசிப் பதியிலிருந்து வருவித்தான். இங்ஙனம் பாண்டியன் காடு கெடுத்து நகராக்கி, நகரைப் பாண்டிய நாட்டிற்குக் கோ நகரமாக விளங்கச் செய்தான்.

## நான்மாடக் கூடல் என்ற பெயர்

ஒருமுறை வருணன் மதுரையை அழிக்கும்படி ஏழு மேகங்களை ஏவினான். அவை ஏழும் கடல் நீரைப் பருகி, உடல் கறுத்து, மின்னல் வீசித் திசை களும் வானும் செவிடுபட இடியேறுகள் விழ மழை பொழிந்தன. வானம் கருத்தமையால் எங்கும் இருள் காணப்பட்டது. காற்று வேகமாக அடித்துத் தாக்கியது. மேகங்கள் மதுரை நகரத்தைச் சூழ்ந்து மூடிக்கொண்டன. அப்பொழுது மது ரையை ஆண்ட அபிஷேக பாண்டியனும் குடிமக் களும் உலகம் அழியும் நாள் அதுவோ என்று மனம் மயங்கினர். பாண்டியன் சிவபெருமான் கோவிலை அடைந்து, இறைவனை வணங்கி, நகரத் தையும் குடிமக்களையும் காக்குமாறு வேண்டினான். உடனே சிவபெருமான் தன் சடையில் இருந்த நான்கு மேகங்களையும் பார்த்து, "இம்மதுரைப் பதியின் நான்கு எல்லைகளையும் வளைந்து நான்கு மாடங்களாகி, வருணன் ஏவிய ஏழு மேகங்களை யும் விலக்குங்கள்", என்று கட்டளையிட்டான். அந்நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாய் வளைந்து, நான்கு திசைகளிலும் சூழ்ந்து

பொருத்துவாய் தோன்ருது ஒன்றுபட்டு, மாட வரிசைகளும் கோபுரங்களும் பிறவும் தூண்களைப் போலே நின்று தாங்க, நகரம் முழுமையும் மறைந்தன.

அந்த நான்கு மாடங்களுக்கு அடியில் மன்னனும் குடிகளும் இன்பமாகத் தங்கியிருந்தனர். ஏழு மேகங்களும் பொழிந்த மழை, சிவபெருமாஞல் அமைக்கப்பட்ட நான்கு மாடங்களின்மீதும் பட்டுச் சிதறியது. இவ்வாறு மதுரை நன்முறையில் பாதுகாக்கப்பட்டது. தன் கருத்து நிறைவேருததைக் கண்ட வருணன் வெட்கப்பட்டான் ; தன் தவற்றை உணர்ந்து இறைவனைப் பூசித்துப் பணிந்து மன்னிப்புக் கேட்டான். இறைவன் ஏவிய நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாய்க் கூடியதால் மதுரை மூதூர் **நான்மாடக் கூடல்** எனப் பெயர் பெற்றது.

## ஆலவாய் என்ற பெயர்

வங்கிய சேகர பாண்டியன் மதுரையை ஆண்டபொழுது நகரில் மக்கட் கூட்டம் மிகுந்திருந்தது. அதனல் கவலையுற்ற மன்னவன் மதுரையை விரிவாக்க முயன்ருன் ; தன் முன்னேர் வரையறுத்து வைத்த நகர எல்லையை உணர்த்தியருளுமாறு சிவபெருமானை வேண்டினுன். சிவபெருமான் ஒரு சித்தராய் அவன் முன்பு தோன்றினுர். அவருடைய அரைஞாண், பூணூல், குண்டலம், கால் சதங்கை, கைவளை என்பன பாம்புகளாகக் காணப்பட்டன. அந்தச் சித்தர் தம் கையிலிருந்த பாம்பைப் பார்த்து, “நீ இப்பாண்டியனுக்கு இப்பெரிய நகரத்தின் எல்லையை வரை

யறுத்துக் காட்டு,'' என்று கூறினர். அவ்வரவம் சித்தரை வணங்கி, ''பெருமானே, இந்நகரம் அடியேன் பெயரினுல் விளங்கும்படி அருள்புரிதல் வேண்டும்,'' என்று வேண்டிக்கொண்டது. சித்தர் ''அங்ஙனமே ஆகுக,'' என்று அருளினர். உடனே அந்நாகம் விரைந்து கீழ்த்திசையின்கண் சென்று, தன் ஒளி பொருந்திய வாலை நீட்டிப் பெரிய அந்நகருக்கு வலமாக நிலத்தில் படிந்து, உடலை வளைத்து, வாலைத் தனது வாயில் வைத்துப் பாண்டியனுக்கு நகர எல்லையை வரையறுத்துக் காட்டியது; பின்னர் மீண்டும் வந்து சித்தர் கையில் கங்கணமாய் அமைந்தது.

பாண்டியன், பாம்பு வளைந்து எல்லை வரையறுத்தபடி மதிலை எழுப்பினன்; நான்கு பெரிய வாயில்களுக்கும்-தெற்கே திருப்பரங்குன்றமும், வடக்கே இடபக்குன்றமும், மேற்கே திருவேடகப் பதியும், கிழக்கே திருப்பூவண நகரும் எல்லைகள் ஆகும்படி அம்மதில் வாயில்களை அமைத்தான். இங்ஙனம் அமைக்கப்பட்ட நீண்ட மதில் ''ஆல வாய் மதில்'' எனப் பெயர் பெற்றது. அந்நகரம் அன்று முதல் ஆலவாய் என அழைக்கப்பட்டது. இங்ஙனம் அழைக்கப் பெற்ற ஆலவாய் புதிய பல தெருக்களையும், புதிய பல அமைப்புக்களையும் பெற்று விளங்கியது.

## ஆனைமலை முதலியன

மதுரை வையையாற்றின் வலப்புறக் கரையில் அமைந்துள்ள பெருநகரமாகும். மதுரையை அடுத்து மூன்று சிறந்த மலைகள் உள்ளன. அவை ஆனைமலை, நாகமலை, பசுமலை என்பன. இரண்டு

மைல் நீளமும் இரண்டு பர்லாங்கு அகலமும் 250 அடி உயரமும் கொண்ட அகன்ற ஒரு யானையின் தோற்றத்தோடு அமைந்திருப்பதால் ' ஆனைமலை ' என்ற பெயர் இம்மலைக்கு வந்தது. மதுரையை அடுத்துக் கிழக்கும் தெற்குமாகப் பரவியுள்ள மலைத்தொடரே நாகமலை என்பது. இம்மலைத் தொடர் ஒரே அளவு உயரமாகவும் ஒழுங்காகவும் வளைந்தும் இருப்பதால் இப்பெயர் பெற்றது. மிகப் பெரியதொரு நாகம்தான் மலையின் உருவில் உள் ளது என்று தலபுராணம் கூறுகின்றது. சமணர்கள் மதுரையை அழிக்கும் எண்ணம் கொண்டு ஏவி விட்ட அந்த மிகப் பெரிய நாகத்தைச் சிவபெரு மான் கல்லாக்கிச் சமணர் கொண்ட எண்ணத்தை அழித்தார் என்றும், அதனாலேயே அம்மலை இன் றும் ' நாக மலை ' என்னும் பெயருடன் வழங்கு கின்றது என்றும் தலபுராணம் கூறுகின்றது.

இவ்வாறே மற்றொரு மலையான பசுமலையும் அப்பெயர் பெற்றதற்குரிய கதையொன்று கூறப் படுகின்றது. இம்மலை மதுரைக்குத் தெற்கே இரண்டு கல் தொலைவில் உள்ளது. நாகத்தின் வாயிலாக மதுரையை அழிக்க எண்ணிய சமணர் எவ்வாறேனும் தங்கள் முயற்சி வெற்றிதர வேண்டும் என்ற விழைவால், மிகப்பெரியதொரு வேதாளத்தை அவர்களுக்கிருந்த மந்திர சக்தி யால் பசுவின் உடலில் புகுத்தி அனுப்பினர். பசு சைவரால் போற்றப்படுவது ஆகையால் அதனை எவரும் கொல்லமாட்டார்கள். அதனால் தங்கள் எண்ணம் வெற்றிபெறும் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் இம்முறையை மேற்கொண்டனர். சிவ பெருமான் இதனை உணர்ந்து, தமது வாகனமான

எருதினை, சமணர்கள் அனுப்பிய பசுவினைப் போல் பெரிதாக்கி, வந்த பசுவை எதிர்க்க அனுப்பினர். வந்த பசு சிவனார்து எருதினைக் கண்டு அன்பால் மயங்கி இறந்தது. அங்ஙனம் இறந்த அப்பசுவே மலைவடிவம் கொண்டது. அம் மலையே பசுமலை. இது மதுரைத் தலபுராணம் கூறும் வரலாறு.

## சிலப்பதிகாரத்திலும் மதுரைக் காஞ்சியிலும் மதுரை பற்றிய செய்திகள்

மதுரை மாநகரைப் பற்றிய செய்திகள் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாத்திலும், பத்துப் பாட்டில் ஒன்றான மதுரைக்காஞ்சியிலும் உள்ளன. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள் ; மதுரைக் காஞ்சியின் ஆசிரியர் மாங்குடி மருதனார். இவ்விரு இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ள மதுரையின் சிறப்பினைக் காண்போம் :

### கோட்டை

நகரத்தைச் சூழ்ந்து அமைந்துள்ள அகழி ஆழமுடையது. கோட்டை மதில் யாவராலும் தாக்க முடியாதது; பகையரசர் புறங்காட்டி ஓடுதற்கு ஏதுவானது; சுரங்க வசதியுடையது. நெடிய நிலைகளையும் திண்ணிய கதவினையும் உடைய வாயிலின் மீது மாடங்கள் பல கட்டப்பட்டிருந்தன. மக்களும் விலங்குகளும் எப்போதும் போதலும் வருதலும் செய்தலின், கோட்டைவாயில் இடையறாத நீரோட்டமுடைய வையை யாற்றை ஒத்திருந்தது.

**மதில்மேற் பொறிகள்**

புறஞ்சேரியை அடுத்துக் காவற்காடு இருந்தது; அதனை அடுத்து அகழி இருந்தது. அதைத் தாண்டியதும் கோட்டை மதில் இருந்தது. அம் மதில்மீது வளைந்து தானே எய்யும் எந்திர வில்லும், கரிய விரலையுடைய குரங்குபோலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறியும், கல்லை உமிழுங் கவணும், காய்ந்திறைத்தலால் சேர்ந்தாரை வருத்துவதாய நெய்யும், செம்புருக்கும் மிடாவும், உருகக் காய்ச்சி எறிவதற்கு எஃகுபட்டிருக்கும் உலைகளும், தாக்கும் பொறிக்குக் கல்லிட்டு வைக்கும் கூடையும், அகழியை நீங்கி மதிலைப் பற்றுவோரை அழிக்கத் தூண்டில் வடிவாகச் செய்யப்பட்டுள்ள கோத்துவலிக்கும் கருவியும், கழுக்கோல் போலக் கழுத்தில் பூட்டி முறுக்குஞ் சங்கிலியும், ஆண்டலைப்புள் வடிவாகச் செய்து பறக்கவிட்ட உச்சியைக் கொத்தி மூளையைக் கடிக்கும் பொறிநிரைகளும், அகழியிலேறின் மறியத் தள்ளும் இருப்புக் கவையும், கழுக்கோலும், அம்புக் கட்டும், சிற்றம்புகளை வைத்து எய்யும் இயந்திரமும், மதில் உச்சியைப் பற்றுவாரை அழிக்கவல்ல ஊசிப் பொறிகளும், மாற்றார்மேற் சென்று கண்ணைக் கொத்தும் சிச்சிலிப் பொறியும், மதில் உச்சியை அடைந்தார் உடலைக் கோட்டாற் கிழிக்க இரும்பால் செய்து வைத்த பன்றிப் பொறியும், மூங்கில் வடிவாகச் செய்து அடித்தற்கமைத்த பொறியும், கதவுக்கு வாயிலாக உள்வாயிற்படியிலே நிலத்தில் வீழ விடு மரங்களும், கணைய மரமும், கோலும் (விட்டேறும்), குந்தமும், ஈட்டி முதலியனவும், இவையே அல்லாது பிற பல பொறிகளும் அமைக்கப்பட்டி

ருந்தன. கோட்டை மதில்மீது பாண்டியனது மீனக்கொடி பறந்துகொண்டிருந்தது.

### தெருக்கள்

கோட்டை மதிலை அடுத்துக் கோட்டைக் காவலருடைய தெருக்கள் இருந்தன. அவற்றுக்கு அப்பால் பலவகைத் தொழிலாளருடைய தெருக்கள் காணப்பட்டன. அவற்றை அடுத்து, கவசம், அங்குசம் போன்றுள்ள போர்க்கருவிகள் யாவும் செய்து விற்கும் கடைகள் ஒருபுறம் விளங்கின. அகிற்புகை, மயிர்ச்சாந்து முதலிய வாசனைப் பொருள்கள் விற்கும் கடைகள் மறுபுறம் விளங்கின. இவற்றை அடுத்து, வயிரம், மரகதம், மாணிக்கம், புட்பராகம், வைடூரியம், கோமேதகம், முத்து, பவளம், இரத்தினம் ஆகிய ஒன்பது வகைப்பட்ட மணிகள் மல்கிக் கிடக்கும் இரத்தினக் கடைகள் ஒருபால் இருந்தன. சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என்னும் சிறந்த நால்வகைச் சாதிப் பொன் பேதத்தைப் பகுத்தறியும் பொன் வாணிகர் மிக்கிருக்கும் பொற்கடைகள் மறுபுறம் இருந்தன. எள்ளு, கொள்ளு, பயறு, உளுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை போன்ற பதினறு வகைத்தாகிய கூலம் குவித்த கூலக்கடைத்தெரு அடுத்து இருந்தது. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனச் சொல்லப்பட்டார் இருக்கும் நான்காய் வேறுபட்ட தெருக்கள் அடுத்து இருந்தன. கோவிலைச் சுற்றிலும் தேரோடும் அகன்ற பெரிய தெருக்கள் விளக்கமுற்றிருந்தன.

### நால்வகைப் படைகள்

யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை என்பன சிறப்பு நாட்களில் மதுரைத் தெருக்களிற் செல்லும். புயற் காற்றில் சிக்கி நிலை தளர்ந்து சுழலும் கப்பல் போல அரசனது யானைப்படை சினம் மிகுந்து சுழன்று, குத்துக் கோற்காரரைக் கொன்று, பாகரைத் தூக்கி எறியும் ; காலிற் சங்கிலியைப் பிணித்திருக்கும் கட்டுத் தறியை முறிக்கும். காற்றைப் பிளந்து ஞாயிற்றை அடைய விரும்பும் அன்னச் சேவலை ஒத்த வெண்ணிறக் குதிரைகள் பூட்டப்பெற்ற தேர்ப்படை வலி மிக்கது. குதிரைப்படை விரைவான செலவினை உடையது. காலாட்படை வில்-வாள்-ஈட்டி வீரர்களைக் கொண்டது.

### அந்தி அங்காடி

சங்கிலும் வளையல் முதலிய நகைகள் செய்பவரும், மணிகளைத் துளையிடுபவரும், பொற்கொல்லரும், பொன் வாணிகரும், ஆடை விற்பவரும், மலர்களையும் சாந்தினையும் விற்பவரும், நெய்தற்றொழில் செய்பவரும், ஓவியக்காரரும், பிறரும் கூடி அந்திக் கடையில் வாணிகம் செய்வர். அவர்களால் எழுப்பப்படும் ஆரவாரம், சேரனது அவையில் அறிஞர் தருக்கங்களைக் கூறும் ஆரவாரத்தை ஒத்திருக்கும்.

### சமயப் பொறுமை

மதுரை மாநகரம் எல்லாச் சமயங்களும் எவ்வித வேறுபாடுமின்றிக் கலந்துவாழும் நகரமாக விளங்கியது. இவ்வுண்மை சிலப்பதிகாரத்தால்

தெளிவாகும். சிவன், விஷ்ணு, பலராமன், முருகன், புத்தன், ஜினன் ஆகிய பல கடவுளர்க்கும் தனித்தனியே கோவில்கள் வழிபாட்டுடன் அமைந்து சிறந்து விளங்கின.

### அறங்கூறவையம்

ஒவ்வொரு துறையிலும் முறையோடு ஒழுகினுல் நடுவுநிலைமை என்னும் அறம் தானே அமையும். நடுவுநிலைமை உடையாரது செல்வம் அழிவுருது, அவரது வழியிலுள்ளார்க்கும் நன்மை பயப்பதாய் அமையும். உள்ள உறுதியுடையார், தீமையில்லாது நன்மையைத் தருவதாஞலும் நடுவுநிலைமை தவறி உண்டாகும் ஆக்கத்தை விரும்பார். ஒருவர்க்குப்பின் எஞ்சி நிற்கும் புகழாலும் பழியாலும் அவர் நடுவுநிலைமை உடையவரா, அற்றவரா என்பது விளங்கும். முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல்போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றேர்க்கு அழகாகும். அத்தகைய சான்றேர் உள்ளத்திலும் சொல்லிலும் கோணல் அற்றவராக இருப்பர். இங்ஙனம் பல்லாற்ருனும் சிறந்தவரான நடுவுநிலைமை மிக்க அறிஞர் பலரைக் கொண்ட அறம் கூறும் அவையம் மதுரையில் இருந்தது.

### அறக்கூழ்ச்சாலை

வறியவர்க்கு வயிருர உணவு பரிமாறும் அறக்கூழ்ச்சாலை பாண்டியன் கோநகரில் இருந்தது. அதனில் பலா, வாழை, முந்திரிகைப் பழங்களையும், பாகல், வாழை, வழுதுணங்காய் முதலிய

காய்களையும், இலைக் கறிகளையும், இறைச்சி கலந்த சோற்றையும், கிழங்கு வகைகளையும், பால் முதலிய வற்றையும் பரிமாறுவோர் வறியவர்க்கு வழங்கி வந்தனர்.

### மகளிரும் செல்வரும்

பூத்தொழில் அமைந்த கைவளையல்களையும், பிற பொன் அணிகளையும், சிலம்பையும் அணிந்த மகளிர் மாடங்கள் தோறும் நிலாமுற்றத்தில் விழாக் காண்பர். மாடங்களில் கட்டியுள்ள கொடிகள் அம் மகளிருடைய முகங்களை மறைக்கும்; காற்றடிக் கும்போது அக்கொடிகள் அசைந்து இடம் தருத லால், அம்மகளிர் முகங்கள் மேகங்கட்கு இடையில் தோன்றும் திங்களைப்போலக் காணப்படும். செல் வர் கண்கவர் பட்டாடையை மாலையில் உடுப்பர்; அரையில் உடைவாளைச் செருகியிருப்பர்; தோளில் மேலாடைகளைத் தரித்து வேப்ப மாலையையும் மாணிக்க மாலையையும் அணிவர்; மாலையில் குதிரை கள் பூட்டிய தேரில் காலாட்கள் சூழ்ந்துவரத் தெருக்களிற் செல்வர்.

### பலவகை நிகழ்ச்சிகள்

திருமாலுக்குச் சிறந்த நாள் ஓண நாள் எனப் படும். அந்நாளில் திருமாலுக்கு விழா நடைபெறும். போரில் வல்ல மறவர் கள்ளுண்டு ஒருவரோடொரு வர் போரிட்டு நெற்றியில் வடுப்பெற்றுத் தோன்று வர். குழந்தையைப் பெற்ற செல்வமகளிர் தெய் வத்தின் அருளால் எவ்விதத் துன்பமும் அற்றுக் குளத்து நீரில் நீராடுவர். அப்போது முதற்சூல்

கொண்ட மகளிர் தாமும் எவ்விதத் துன்பமும் இல்லாது மக்களைப் பெறவேண்டும் என்று கடவுளை வேண்டுவர்; பின்னர்ப் பூசனைக்கு வேண்டும் பலவகைப் பொருள்களைச் சேர்ப்பர்; சுற்றத்தினரை வரவழைப்பர். தேவராட்டி தெய்வமேறப் பெற்று நற்சொல் கூறுவாள். அப்பொழுது யாழிற் செவ்வழிப்பண் வாசிக்கப்படும்; பல இயங்கள் ஒலி செய்யும்; சூலுற்ற மகளிர் மயில்போல மெத்தென நடந்து பாற்சோறு உண்பர். மாரிக்காலத்துப் பூத்த குறிஞ்சிப் பூவைத் தலையிற் சூடிய மகளிர், கடம்பமாலையைச் சூடுகின்ற முருகனை உள்ளத்தில் நிறுத்தி வழிபடுவர். பின்னர் ஒருவரோடு ஒருவர் கைகோத்து மனைகள்தோறும் குரவைக் கூத்தாடுவர். இவையாவும் இரவில் முதற்சாம நிகழ்ச்சிகள் ஆகும். நள்ளிரவில் நகரில் தெய்வங்கள் உலவும்; சங்கு முதலிய வாத்தியங்கள் ஒலியின்றி இருக்கும். நகரமக்கள் யாவரும் தத்தம் தொழில் முடிந்ததும் கண்ணயர்வர்.

### கடமை உணர்ச்சி

நகரத்தார் யாவரும் கண்ணுறங்கும் நடுயாமத்தில் நகரக்காவலர் கண்ணுறங்கார். அஞ்சாநெஞ்சமும் புலியொத்த வலிமையும் கொண்ட அக்காவலர், கள்வரின் தந்திரங்களை நன்குணர்ந்தவர்; மழையால் தெருவில் நீர்ப்பெருக்கம் மிகுந்தாலும், காரிருள் கவிந்திருப்பினும் காவலில் தப்பாத கடமை உணர்ச்சி உடையவர். மெல்லிய நூலேணி அவர்கள் அரையில் சுற்றப்பட்டிருக்கும். அவர்கள் காற்றினும் கடிதிற் செல்லும் கள்வரையும் கட்டிப் பிடிக்கும் ஆற்றல் மிக்கவர். இங்ஙனம் கடமை

உணர்ச்சி மிக்க வீரர்களால் காக்கப்படும் மதுரை மாநகரில் கள்வர் பயம் ஏற்படுதல் அரிதாகும்.

### காலை நிகழ்ச்சிகள்

வேதம் வல்ல அந்தணர் வைகறையில் துதிகளைப் பாடுவர். பாகர் யானைகட்குச் சோற்றுக் கவளத்தை ஊட்டுவர். தேரில் பூட்டப்பெறும் குதிரைகள் பந்தியில் நின்று புல்லைக் கடிக்கும். பண்டங்களை விற்பவர் தம் கடைகளை மெழுகுவர். உறுதியான கதவுகள் மூடுவதாலும் திறப்பதாலும் ஓசை செய்யும். காலையிற் கள்ளுண்டு மயங்கியவர் மதுமயக்கத்தால் மழலை பேசுவர். அரசனை நின்று ஏத்துவோர் நின்று வாழ்த்துவர். பள்ளியெழுச்சி பாடும் வைதாளிகர் அரசன் துயில் நீத்தற்குரிய பாடல்களைப் பாடுவர். நாழிகைக் கணக்கர் நேரத்தைக் கூறக் காலை முரசம் ஒலி செய்யும். கோழிச் சேவல் பொழுது புலர்ந்ததை அறிவிக்கக் கூவும். ஆண் பறவைகள் தத்தம் பெடையுடன் கூடி இனிய குரல் எழுப்பும். கூட்டில் அடைத்து வளர்க்கப்படும் கரடி, புலி முதலிய விலங்குகள் முழக்கமிடும்.*

### அரசனைப்பற்றி

நாடாளும் நல்வேந்தன் வைகறையில் துயில் நீத்துப் பணிமகளிர் பொன் 'வட்டில்களில் மது வைத் தர, அருந்தி மகிழ்வான். அரசமாதேவி சிறந்த கற்புடையவள்; மணிகள் பதிக்கப்பெற்ற அணிகளை அணிந்தவள்; மாந்தளிர் போன்ற

---

* உயிர்க்காட்சிச்சாலை அப்பண்டைக்காலத்திலேயே இருந்தது போலும்!

மேனியள்; காதில் மகரக் குழையைக் கொண்டவள்; அன்றலர்ந்த தாமரையை வென்ற முகத்தினள். இத்தகைய பேரழகி உபசரிப்ப மன்னன் எழுவான். காலைக் கடன்களை முடித்த மன்னவன் மார்பில் மாலை அணிவான்; கையில் வீரவளையை அணிவான்; விரலிற் கணையாழியைப் பூண்பான். அணியவேண்டும் அணிகலன்களையும் ஆடையையும் அணிந்து, மன்னன் நாளோலக்க மண்டபத்தில் வீற்றிருப்பான்.

இந்நிலையில் ஏனாதி, காவிதி முதலிய சிறப்புப் பட்டங்களைப் பெற்ற படைத்தலைவர் வேந்தனது வெற்றித்திறத்தை வாழ்த்துவர். பின்னர், மன்னவன், போரில் தமதாற்றல் விளங்கப் பொருது வெற்றி கண்ட வீரர்கட்குத் தனது மனம் கனிந்த வாழ்த்துக்களைக் கூறி, அவரவர் தகுதிக்கேற்பப் பரிசில் வழங்கி அவர்களை மகிழ்வித்துத் தானும் மகிழ்வான்.

## சங்க காலத்திற்குப் பின்பு


இச்சிறப்புடைய மதுரை மாநகரம் சங்க காலத்திலும், பிற்காலத்தில் கி. பி. பதினன்காம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும் மிகச்சிறந்த நிலையில் இருந்தது என்பதை இலக்கியங்களைக் கொண்டும் கல்வெட்டுக்களைக் கொண்டும் நன்கு அறியலாம். வளைந்த மதிலுக்குள் ஏழு திருச்சுற்றுக்கள் அமைந்திருந்தன. இந்த ஏழு திருச்சுற்றுக்களிலும் குடிமக்கள் வாழும் தெருக்களும், கோவில்களும் அமைந்திருந்தன. மீனாட்சி அம்மன் கோவில் நடுநாயகமாக இருந்தது. கி. பி. பதினன்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாலிக்

காபூர் என்பவரது படையெடுப்பினுல் நக ரத்தின் பெரும்பகுதி சேதமுற்றது. அந்நிகழ்ச் சிக்குப் பிறகு ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் மதுரையில் முஸ்லிம்களின் ஆட்சி நிலவியது. அதன் பின்னர் உண்டான விஜயநகர ஆட்சிக் காலத்திற்ருன் மதுரையின் பல பகுதிகள் புதுப் பிக்கப்பட்டன. விசுவநாத நாயக்கர் காலம் தொடங்கிக் கோவில் மிகப் பெரிய அளவிற் கட்டப் பட்டது. அவருக்கு அமைச்சராக இருந்த அரிய நாத முதலியார் ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டு வித்தார். பின்னர் வந்த திருமலை நாயக்கர் காலத் தில் கோவிலில் மேலும் பல திருப்பணிகள் செய்யப் பட்டன. இங்ஙனம் கோவிலில் கருவறை நீங்க லாக இன்றுள்ள எல்லாப் பகுதிகளும் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டன. நாயக்க மன்னர்கள் மதுரை மீனுட்சி அம்மனைத் தங்கள் குலதெய்வ மாகக் கொண்டாடிவந்தனர். இவ்வாறு நாயக்க மன்னர்கள் மதுரையின் பண்டைச் சிறப்பினை ஒருவாறு புதுப்பித்து, வரலாற்றில் அழியாப் புகழ் பெற்றனர்.

## இன்றைய மதுரை

இன்றைய மதுரை, மதுரை மாவட்டத்திற்கும் இராமநாதபுர மாவட்டத்திற்கும் தலைநகரமாக இருக்கின்றது. ஆதலால் அங்குப் பல அரசாங்க அலுவலகங்கள் இருக்கின்றன. கண்ணைக் கவரத் தக்க பெரிய கடைத்தெரு மதுரை மூதூரை அழகு செய்கின்றது. திருமலைநாயக்கர் மகால், புது மண்டபம் என்பன வரலாற்றுச் சின்னங்களாக விளங்குகின்றன. சைவ வைணவர் கோவில்களும்

மசூதிகளும் கிறித்தவர் கோவில்களும் நகரின் பல பகுதிகளில் காணப்படுகின்றன. மதுரை மாநகரில் அமெரிக்கன் கல்லூரி, மதுரைக் கல்லூரி, தியாக ராசர் கல்லூரி என ஆண்களுக்கு மூன்று கல்லூரி




திருமலை நாயக்கர் மஹால்

களும்; டோக் பெருமாட்டி கல்லூரி, பாத்திமா கல்லூரி எனப் பெண்களுக்கு இரண்டு கல்லூரி களும், பல உயர்நிலைப் பள்ளிகளும், நடுத்தரப் பள்ளிகளும், தொடக்கநிலைப் பள்ளிகளும் இருந்து கல்விப்பணி ஆற்றிவருகின்றன. மேலும் மருத் துவக் கல்லூரி, தொழிற் கல்லூரி என்பனவும் தொண்டு செய்கின்றன.

**மீனாட்சியம்மன் கோவில்**

மதுரையின் நடுநாயகமாய் அமைந்துள்ள மிகப்பெரிய கோவில் மீனாட்சி அம்மன் கோவிலே யாகும். இக்கோவிலின் இன்றைய தோற்றம் பதி னாறும் நூற்றாண்டினதாகலாம் என்று அறிஞர் கருதுகின்றனர். இக்கோவில் சைவ சமய குரவ ராற் பாடப்பெற்றது. இங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமான் சொக்கநாதர் என்றும், சோமசுந்



மீனாட்சியம்மன் திருக்கோயில்

தார் ,என்றும் அழைக்கப்படுகிறார். கோவிலுக்குள் பொற்றாமரைக் குளம் ஒன்று இருக்கின்றது. இக் குளத்தைப் பற்றிய விவரங்கள் பரஞ்சோதி முனி

வர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் விரிவாக உள்ளன. இக்கோவில் அல்லாமல் வேறு பல கோவில்களும், அழகிய குளங்களும், திருமலை நாயக்கர் மகால், புதுமண்டபம், மங்கம்மாள் சத்திரம் முதலிய கண்கவர் கட்டடங்களும் மதுரை மாநகரை அலங்கரிக்கின்றன.

## செல்லத்தம்மன் கோவில்

இது வடக்கு மாசி வீதிக்கு அருகில் இருக்கும்



கண்ணகி அம்மன்

துர்க்கையின் கோவில். இக்கோவிலைச் சுற்றிலும் யாதவ மரபினர் வாழ்கின்றனர். இக்கோவிலில்

கண்ணகி ஒரு கையில் சிலம்புடன் உட்கார்ந்துள்ளதை உணர்த்தும் உருவச்சிலை இருக்கின்றது. இந்தக் கோவிலைச் சுற்றி யாதவர் வாழ்தலையும் இக்கோவிலில் கண்ணகியின் உருவச்சிலை இருத்தலையும் காண, இப்பகுதியிற்றான் கண்ணகியை அடைக்கலமாகக் கொண்ட மாதரி என்னும் யாதவப் பெண்மணி வாழ்ந்தனளாதல் வேண்டும் என்று கருதுதல் பொருந்தும்.

## நக்கீரர் கோவில்

இது மேலை மாசி வீதியில் இருக்கின்றது. இக்கோவிலில் நக்கீரர் உருவச் சிலையும் மீனாட்சி–சுந்தரேசுவரர் உருவச் சிலைகளும் வீரபத்திரர் உருவச் சிலையும் இருக்கின்றன. இக்கோவில் பெரிய அளவில் இருந்து இன்று சுருங்கிக் காணப்படுகிறது. வழிபாடு குறைந்து விட்டது. கோவிலின் திருச்சுற்றில் மக்கள் குடியிருக்கின்றனர். எண்ணெய் ஆட்டும் செக்கும் எண்ணெய்க் கடையும் இடம் பெற்றுள்ளன. இது சங்கத்தார் கோவில் என்றும் வழங்கப்படுகிறது.

## இம்மையில் நன்மை தருவார் கோவில்

இது மேலை மாசி வீதியின் தென்கோடியில் உள்ளது. இதுவும் பெரிய கோவிலாகும். தடாதகைப் பிராட்டியாரை மணந்து பாண்டிய நாட்டை ஆண்ட சுந்தரபாண்டியர் என்ற சிவபெருமான் தாம் மனித வுருவம் தாங்கியதற்கு ஏற்ப இக்கோவிலிற் சிவபூசை செய்தார் என்று திருவிளையாடற் புராணம் கூறுகின்றது. இக்கதைக்கு

ஏற்ப, இக்கோவிலின் கருவறைச் சுவரில் மீனாட்சி, சுந்தரேசர் உருவச்சிலைகள் சிவலிங்கத்திற்குப்பின் புறத்தில் இருக்கின்றன. கோவில் தரை இன்றுள்ள சுற்றுப்புறத் தெருக்களின் தரைமட்டத்தைவிடக் கீழிறங்கியுள்ளதும் கோவில் அமைப்பும் பிறவும் இக்கோவிலின் பழைமையை வற்புறுத்துகின்றன.

## திரு ஆப்பனூர்

இஃது இப்பொழுது திரு ஆப்புடையார் கோவில் என வழங்கப்படுகிறது. இக்கோவில் மீனாட்சியம்மன் கோவிலுக்கு வடக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள சிவபிரான் பெயர் திரு ஆப்புடையார் என்பது; அம்மன் பெயர் குரவம்கமழ் குழல் அம்மை என்பது. சோழாந்தகன் என்னும் பாண்டிய அரசன் பொருட்டுச் சிவபெருமான் ஓர் ஆப்பினிடத்தில் தோன்றியருளிய தலம். அருச்சகராகிய சைவ வேதியருக்காக அவர் உலையிலிட்ட வைகையாற்று மணலை அன்னம் ஆக்குவித்தமையால், இக்கோவில் சிவபெருமானுக்கு 'அன்ன விநோதன்' என்ற பெயரும் உண்டு என்று தல புராணம் கூறுகின்றது. திருப்பூவணம் கந்தசாமிப் புலவர் இயற்றிய தலபுராணம் இதற்கு உண்டு. இது சம்பந்தர் பாடல்பெற்ற தலம்.

மதுரையின் கிழக்குக் கோடியில் வையையாற்றுக்கு எதிரில் வண்டியூர்த் தெப்பக்குளம் என்னும் பெயருடன் மிகப்பெரிய திருக்குளம் ஒன்று இருக்கின்றது. அக்குளத்தின் நடுவில் நாற்சதுரமாய் அமைந்த நீராழி மண்டபம் ஒன்று பேரழகுடன் காட்சி அளிக்கின்றது.

மதுரை மாநகரில் ஹார்வி பஞ்சாலை, மீனாட்சி

பஞ்சாலை, பாண்டியன் பஞ்சாலை முதலிய பல ஆலைகள் இருக்கின்றன. அவற்றில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். இங்ஙனம் மதுரை மாநகரம் சமயத் துறையிலும், தொழில் துறையிலும், வாணிகத் துறையிலும், கல்வித் துறையிலும், வரலாற்றுத் துறையிலும் சிறந்து பெருநகரமாக விளங்குகின்றது. நமது தமிழகத்தில் சென்னைக்கு அடுத்த பெரிய நகரமாக விளங்குவது மதுரை மாநகரமேயாகும்.

# 7. வையைக்கரை நாகரிகம்

## ஆற்றங்கரைகளும் தலை நகரங்களும்

நாகரிகம் என்னும் சொல் ஒரு நாட்டு மக்களின் கல்வி, ஒழுக்கம், அறிவு, ஆற்றல் முதலிய நற்பண்புகளை ஒருங்கே குறிப்பதாகும். இத்தகைய நற்பண்புகள் பெரும்பாலும் நீர்வளம் நிறைந்த மருதநிலத்திற்றான் தோன்றி வளர்வது வரலாறு கண்ட உண்மை. ஒவ்வொரு நாட்டிலும் ஆற்றங்கரைப் பகுதிகளிற்றான் பெரும்பாலும் அரசுகள் ஏற்பட்டன. பெரிய வல்லரசுகளுக்கு ஆற்றங்கரையில் அமைந்த நகரங்களே தலைநகரங்களாக இருந்துவந்தன. நமது பண்டைத் தமிழகத்தில் காவிரிக் கரையில் இருந்த காவிரிப்பூம்பட்டினம் சோழர் தலைநகரமாக இருந்தது; பேரியாற்றங் கரையில் வஞ்சி மாநகரம் சேரர் தலைநகரமாகச் செழித்திருந்தது. இவ்வாறே வையைக் கரையில் அமைந்த மதுரை மாநகரம் பாண்டியர் கோநகரமாகப் பல நூற்றாண்டுகள் விளக்கமுற்றிருந்தது.

## நீரும் வளமும்

மலையும் மலைசார்ந்த பகுதியும் ஆகிய குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள் உணவு தேடுவதிலேயே பெரும்பொழுதைக் கழிக்கின்றனர். அங்ஙனமே முல்லைநில மக்களும் நெய்தல்நில மக்களும் உணவுக்கே பெரும் பொழுதினைச் செலவழிக்கின்றனர். சுருங்கக் கூறின், இம்மூவகை நிலங்களின் நீர் வளமற்ற தன்மையே இந்நிலமக்கள் நாகரிகம் பெறத் தடையாக இருக்கின்றது. ஆற்றுப்பாய்ச்சலைப் பெற்ற மருதநிலத்து மக்கள் உழுதொழிலால்

வளமுற்று வாழ்கின்றனர்; கைத்தொழிலும் வாணி கமும் செய்கின்றனர்; பொருள் ஈட்டுகின்றனர்; இவர்களுக்கு நிரம்ப ஓய்வும் உள்ளது. உணவுப் பஞ்சம் இல்லாமையாலும் ஓய்வு இருப்பதாலும் இம்மக்கள் தமது காலத்தைக் கல்வி, கேள்வி, சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், சமயம், அரசியல் முதலியவற்றில் போக்க முனைகின்றனர். இம்முயற்சியால் மருத நிலத்தில் ஒழுங்கான அரசு ஏற்படுகிறது; பல கலைகள் வளர்ச்சி அடைகின்றன.

வையை ஆற்றங்கரையில் பல நூற்றாண்டுகளாக இருந்துவருவதாலும் பாண்டியர் கோநகரமாகச் சிறந்திருந்ததாலும் மதுரை மாநகரம் பாண்டிய நாட்டு நாகரிகத்திற்குப் பிறப்பிடமாக விளங்கியது.

## ஆட்சி முறை

### பாண்டியர் ஆட்சி

உலகம் முழுமையும் பண்டைக் காலத்தில் கோனாட்சியே நிலவியிருந்தது. ஆதலால் மதுரையில் பாண்டியர் ஆட்சி பல நூற்றாண்டுகள் இருந்து வந்தது. சங்க காலப் பாண்டியரும் பிற்காலப் பாண்டியரும் நாட்டுப் பற்றுடையவர்; இமைகள் விழிகளைப் காப்பதுபோலக் குடிகளைக் காத்துவந்தனர்; அறநெறி தவறாது செங்கோல் அரசராய் விளங்கினர். அவ்வேந்தர் மிக்க மான வுணர்ச்சி உடையவர்; நாட்டைத் தம் உயிரெனக் கருதியவர். பாண்டிய மன்னர் இராக் காலங்களில் மாறு வேடம் பூண்டு நகரத் தெருக்களில் சுற்றி அலைந்து

குடிகளின் குறைகளை உணர்ந்து அவைகளை நீக்கும் திருப்பணியில் ஈடுபட்டனர்; காடு கெடுத்து நாடாக்கினர் ; குளம் தொட்டு வளம் பெருக்கினர் ; நாட்டைப் பல பிரிவுகளாகப் பிரித்து ஆட்சி புரிந்தனர். பாண்டிய நாட்டு வீரர் வீர வுணர்ச்சி மிக்கவர் ; புறங்காட்டி ஓடுதலை விரும்பாதவர் ; மானமே பெரிதென மதிப்பவர்.

**வஞ்சினம் கூறல்**

> " ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப் படும்."

என்ற பொய்யாமொழியினை நன்குணர்ந்த பாண்டிப் பெருவேந்தர், பிறந்த நாட்டிடத்தும் வளர்த்த மொழியிடத்தும் நீங்கா அன்புடையராயிருந்தனர். " என்னை எதிர்த்த பகைவரை யான் வெல்லேனாயின், நாட்டைக் காக்கும் பாண்டியர் மரபிலிருந்து யான் மாறிப் பிறப்பேனாகுக. என் வாழ்க்கைத் துணைவியாகிய மனைவியை விட்டு யான் பிரிந்து துன்புறுவேனாகுக," என்று பூத பாண்டியன் செய்த சூளுரையிலிருந்து, அவனது ஆட்சிப் பொறுப்புணர்ச்சியையும் இல்லற வாழ்க்கைச் சிறப்பையும் நாம் நன்குணரலாம். " என்மீது படையெடுத்து வந்த பகைவரை நான் வெல்லேனாயின், குடிகள் பழித்துரைக்கும் கொடுங்கோலன் ஆகுக," என்று தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் கூறிய சபதத்திலிருந்து அவனது ஆட்சிப் பொறுப்பினை நாம் நன்கு அறியலாம் அல்லவா ?

### மான வுணர்ச்சி

பொற்கொல்லன் பேச்சை நம்பிக் குற்ற மற்ற கோவலனைக் கொல்வித்தது தவறு என்பதை உணர்ந்தவுடன் ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன்,

> "யானோ அரசன் யானே கள்வன்,
> மன்பதை காக்கும் தென்புலம் காவல்
> என்முதல் பிழைத்தது, கெடுகஎன் ஆயுள்"

என்று வருந்திக் கூறித் தன் அரியணையிலிருந்து மயங்கி வீழ்ந்தான்; விழுந்தவன் மீண்டும் எழ வில்லை. மான வுணர்ச்சி அவன் உயிரைக் கொள்ளை கொண்டது. மிகச் சிறந்த பத்தினியாகிய கோப் பெருந்தேவியும் அரசனுடன் ஆவி துறந்தாள். பாண்டியருக்குப் பின்வந்த நாயக்கரும் அறநெறி வழுவாது குடிகளைக் காத்துவந்தனர்.

### தொழிலும் வாணிகமும்

சந்திரகுப்த மௌரியன் காலத்தில் பாண்டிய நாட்டு மெல்லிய ஆடைகளும், முத்துக்களும், மௌரியப் பெருநாட்டில் வாணிகப் பொருள்களாக விளங்கின என்பது சாணக்கியர் எழுதிய பொருள் நூலால் தெரிகிறது. பாண்டிய நாட்டு முத்துக்கள் ரோமப் பெருநாட்டில் மிகுதியாக விற்பனை யாயின. ரோமப் பேரரசர்க்கும் பாண்டியர்க்கும் வாணிகத் தொடர்பு நெடுங்காலமாக இருந்து வந்தது. ரோமப் பெருநாட்டிலிருந்து கண்ணடி முதலிய பொருள்கள் பாண்டிய நாட்டில் இறக்குமதி ஆயின. ரோம் நாட்டு மக்களுள் ஒரு பகுதியின ரான யவனர்கள் மதுரைக் கோட்டை வாயில்களைக் காப்பவராகவும் பலவகைத் தொழிலாளராகவும்

பாண்டிய நாட்டில் இருந்து வந்தனர் என்பதைத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. இங்ஙனம் நடந்த உள்நாட்டு வாணிகமும் வெளிநாட்டு வாணிகமும் பல நூற்றாண்டுகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. பாண்டிய நாடு கிழக்கு நாடுகளுடனும் மேற்கு நாடுகளுடனும் கடல் வாணிகம் செய்து வந்தமைக்குரிய சான்றுகள் பலவாகும். மதுரைக் கடைவீதியில் கோவலன் காலத்தில் விற்பனையான பொன் வகைகளும், நவரத்தின வகைகளும் அவற்றின் பெயர்களும் காண, அக்கால வாணிகம் நன்னிலையில் இருந்ததை நன்கறியலாம்.

## கல்விச் சிறப்பு

### கல்விச் சிறப்பு

சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தருள் சேரரும் சோழரும் தமிழை வளர்த்தனரேனும், சங்கம் வைத்துத் தமிழ் ஆராய்ந்து வளர்த்த பெருமை பாண்டியர்க்கே உரியது. பாண்டியர் மதுரையில் பல நூற்றாண்டுகள் சங்கம் வைத்து வளர்த்தனர் ; பல நாட்டுப் புலவர்களையும் ஆதரித்தனர் ; கல்வியின் சிறப்பையும் தேவையையும் மிகத் தெளிவாக அறிந்திருந்தனர்.

### கற்றவனின் பெருமை

"ஒரு தாய் தான் பெற்ற பல பிள்ளைகளுள் கற்றவனையே விரும்புவாள். ஒரு குடும்பத்தில் உள்ள மூத்தவனை அழையாது, அவனினும் இளைய கற்றவனின் யோசனையையே அரசனும் விரும்பிக் கேட்பான். கற்றவன் தாழ்ந்த இனத்தவன் ஆயினும், அவன் சொற்படியே நடக்க உயர்ந்த

இனத்தவனும் விரும்புவான். இவற்றை நோக்க, கல்வியின் உயர்வு நன்கு தெரிகிறதன்றோ ? ஆத லால் எப்பாடு பட்டாயினும் ஒவ்வொருவரும் கல்வி கற்பது இன்றியமையாதது,'' என்று ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கூறியுள்ளான். இதி லிருந்து, அவன் காலத்தில் கல்விநிலை பாண்டிய நாட்டில் எங்ஙனம் இருந்திருத்தல் கூடும் என் பதை ஒருவாறு உணரலாம்.

## நெடுஞ்செழியன் சூளுரை

''என்னை எதிர்த்த பகைவரை வெல்லே னயின், என் அவைக்களப் புலவர் பெருமானை மாங்குடி மருதனாரைத் தலைவராகக் கொண்ட புல வர் கூட்டம் எனது நாட்டினைப் பாடாது ஒழிவ தாக,'' என்று தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சூளுரைத்தான். இக் கூற்றி லிருந்து, அவன் கற்ற பெருமக்களிடம் கொண்டி ருந்த மதிப்பினை நாம் நன்குணரலாம் அன்றோ ?

## பைந்தமிழ் வளர்த்த பாண்டியர்

பாண்டியர் சங்கம் வைத்துத் தமிழை வளர்த்த தோடு நிற்கவில்லை ; தாமும் பைந்தமிழைப் பாங் குறக் கற்றுச் செய்யுள் இயற்றும் செந்தமிழ்ப் புலவராக விளங்கினர். இவர்தம் மாதேவியாரும் நல்லிசைப் புலமை மெல்லியலாராக விளங்கினர். பூத பாண்டியன், ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன், இளம்பெருவழுதி, பாண்டியன் அறி வுடை நம்பி முதலிய பாண்டிய மன்னர்தம் பாடல் களும், பூத பாண்டியன் தேவியார் பாடலும் சங்க

நூல்களில் நிலேத்து நின்று, பாண்டியரது கல்விச் சிறப்பினைக் குன்றின்மீதிட்ட விளக்கென ஒளிரச் செய்கின்றன.

**மதுரைத் தமிழ்ச் சங்கம்**

சேர-சோழ-பாண்டிய நாடுகளில் பல பகுதிகளிலிருந்தும் புலவர் பலர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நாடி வந்தனர். அவர்கள் பாடிய பாடல்கள் சங்கப்புலவரால் ஆராயப்பட்டன. சங்கத்தால் பாராட்டுப் பெற்ற பாக்களுக்கும் நூல்களுக்கும் பாண்டியர் பரிசுகள் வழங்கினர்; திருக்குறள் போன்ற பெரு நூல்கள் அரங்கேற்றப்பெற்றன. மணிமேகலை காவியம் பாடிய சீத்தலைச் சாத்தனார் சங்கப் புலவருள் ஒருவராவர். "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே," என்று சிவபெருமானை அஞ்சா நெஞ்சத்துடனே நோக்கிக் கூறிய நக்கீரனார் சங்கப் புலவர்க்குத் தலைவராவர். நடுவு நிலை தவருத இத்தகைய தலைமைப் புலவரின்கீழ் இருந்த புலவர்கள் புலமை சான்றவராக இருந்தனரென்று கூறுதல் தவருகாதன்றே? கபிலர், பரணர் போன்ற பெரும் புலவர்களும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தினைச் சேர்ந்தவர்களே. "வையை என்னும் பொய்யாக் குலக் கொடி" என்று வையையைப் பாராட்டிப் புகழ்ந்த புலவரும் சங்கத்துச் சான்றோரே யாவர். மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார், மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுந்தாராயத்தனார், மதுரைக் கணக்காயனார், மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார், மதுரைத் தமிழ்க்

கூத்தனுர், மதுரைப் படைமங்க மன்னியார், மதுரை மருதனிள நாகனுர், மதுரை வேளாளன், மாங்குடி கிழார் முதலிய புலவர்கள் சங்க காலத்தில் மதுரை மாநகரத்தில் வாழ்ந்த பெருமக்களாவர். பறம்பு நாட்டை ஆண்ட பாரியின் மகளிர், ஒக்கூரில் பிறந்து வளர்ந்த மாசாத்தியார், கொற்கையை அடுத்த மாறேக்கம் என்னும் ஊரைச் சேர்ந்த நப்பசலையார் முதலியவர் சங்க காலத்துப் பாண்டிய நாட்டில் சிறப்புற்றிருந்த பெண்பாற் புலவராவர்.

### பிற்காலத்தில்


கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில் பாண்டிய நாட்டில் இருந்த சமணர்கள் மதுரையில் ஒன்றுகூடித் தமிழ்ச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தினர். நாலடியார் போன்ற நீதிநூல்கள் இச்சங்ககாலத்தில் செய்யப்பட்டவை என்று அறிஞர் கருதுகின்றனர். கி. பி. ஏழாம் நூற்றுண்டில் பாண்டிய நாட்டை ஆண்ட நெடுமாறன்மீது பாண்டிக் கோவை என்னும் நூல் பாடப்பட்டது. இங்ஙனம் நூற்றுண்டுதோறும் புலவர் பலர் இருந்து தமிழ் வளர்த்துவந்தனர். தொல்காப்பியம், குறுந்தொகை, திருக்கோவையார், சிந்தாமணி முதலிய பண்டை நூல்களுக்கு உரை வகுத்த நச்சினுர்க்கினியர் பீடுமிக்க மாடமதுரையைச் சேர்ந்தவரேயாவர். திருமலை நாயக்கர் காலத்தில் குமரகுருபர சுவாமிகள் மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களை மதுரையிற் பாடிப் புகழ்பெற்றுர். சிவபெருமான் நிகழ்த்திய அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் பெரும்பற்றப்புலியூர் நம்பியாலும்

பரஞ்சோதி முனிவராலும் இரண்டு நூல்களாக மிகப் பெரிய புராணமாகப் பாடப்பட்டன.

### புதிய தமிழ்ச் சங்கம்

நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சேது சம்ஸ்தானத்தைச் சேர்ந்த வரும் பாலவனத்தம் சமீந்தாரும் ஆகிய **பாண்டித்துரைத் தேவர்** மதுரையில் புதிய தமிழ்ச் சங்கம் ஒன்றைத் தோற்றுவித்தார்; அதன் சார்பில் பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம் என்ற மூன்று வகுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன; மிகச் சிறந்த நூல்நிலேயம் ஒன்று திறந்துவைக்கப் பட்டது; செந்தமிழ் ஆராய்ச்சிக்கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது; செந்தமிழ் என்னும் திங்கள் தாள் தோற்றுவிக்கப்பட்டது. இங்ஙனம் தோற்று விக்கப்பட்ட தமிழ்ச் சங்கம் புலவர் பலரை ஆண்டு தோறும் உண்டாக்கிவருகிறது. ஏறத்தாழ இரண் டாயிரம் ஆண்டுகளுக்குமுன் மதுரையிலிருந்து தமிழ்ச் சங்கம் தமிழ்த் தொண்டு செய்தாற் போலவே, இன்றுள்ள தமிழ்ச் சங்கம் தன்னுல் இயலுமளவு ஒருவாறு தமிழ்த் தொண்டினேச் செய்துவருகின்றது. அதனேப் பலப்படுத்தி, அதன் வாயிலாக நற்றமிழை நலமுற வளர்ப்பது தமிழர் கடமையாகும்.

இச்சங்கப் புலவர்களாய் விளங்கிய பெரு மக்கள், மகாவித்துவான் ரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார், திரு நாராயணேயங்கார், கந்தசாமிக் கவிராயர், அரசஞ் சண்முகனுர் என்போராவர். இவர்கள் எழுதியுள்ள நூல்கள் பலவாகும்.



திருவிளையாடல் ஓவியங்கள்

## கலைகள்


### ஓவியக்கலை

மதுரையை அடுத்த திருப்பரங்குன்றம் முருகனது திருக்கோயில் மண்டபத்தில் சங்ககாலத்தில் புராணக் கதைகளை விளக்கும் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன என்னும் செய்தியைப் பரிபாடல் என்னும் நூலால் அறிகின்றோம். இன்றுள்ள மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கருவறைச் சுவர்கள் மீதும் திருச்சுற்றுச் சுவர்கள்மீதும் பொற்றாமரைக் குளத்துக்கு எதிரில் உள்ள சுவர்கள்மீதும் சிவபெருமான் நிகழ்த்திய அறுபத்துநான்கு திருவிளையாடல்களை விரிவாகக் குறிக்கும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. அவை அக்கோயில் புதுப்பிக்கப்பட்ட நாயக்கர் காலத்தவை என்று கூறலாம். அவை நாயக்கர் கால மக்களின் உடைச் சிறப்பையும், அணிச் சிறப்பையும், கூந்தல் ஒப்பனையையும் பிற விவரங்களையும் நமக்கு நன்கு தெரிவிப்பனவாகும். சமயத் தொடர்பான விவரங்களைக் கண்ணுற்கண்டு மனத்தில் பதியவைப்பதற்கென்றே இவ்வோவியங்கள் திருக்கோயில் சுவர்களில் தீட்டப்பட்டுள்ளன. இவை சமயக் கதைகளை உணர்த்துவதோடு, சென்றகால மக்களின் உடைச் சிறப்பு முதலியவற்றையும் உணர்த்துவனவாதலால் நம்மால் கருத்தோடு பாதுகாக்கப்பட வேண்டுவனவாகும்.

### சிற்பக்கலை

மதுரையை அடுத்த ஆனைமலைக் குகைகளில் சமண தீர்த்தங்கரர் உருவங்கள் செதுக்கப்பட்

டுள்ளன. திருப்பரங்குன்றம் குகைக் கோவிலிலும் அழகிய சிற்பங்கள் இருக்கின்றன. இவை அனைத்திற்கும் மேற்பட்ட முறையில் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் பல அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. மீனாட்சி அம்மன் திருமுன் பொற்றாமரைக் குளத்திற்கும் கோபுரத்திற்கும் இடைப்பட்ட மண்டபத்தில் பிட்சாடனர், மோகினி



ஊர்த்துவ நடனம்

அவதாரம் இவற்றை உணர்த்தும் சிற்பங்கள் மிக்க வேலைப்பாடு கொண்டவை. சொக்கநாதர்க்கு எதிரில் உள்ள பெரிய மண்டபத்தில் நடராசரது ஊர்த்துவ நடனத்தை உணர்த்தும் சிற்பமும்,

காளியின் நடனத்தை உணர்த்தும் சிற்பமும், அகோர வீரபத்திரர், அக்கினி வீரபத்திரர் இவர்களை உணர்த்தும் சிற்பங்களும் மிக நுட்பமான வேலைப்பாட்டுடன் அமைந்துள்ளன. இவற்றுக்கு எதிரில் மீனாட்சியம்மன் திருமணம் முதலியவற்றை உணர்த்தும் அருமையான சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்கனவாய் அமைந்துள்ளன.


## ஆயிரக்கால் மண்டபம்

தளவாய் அரியநாதரால் கட்டப்பெற்ற இம் மண்டபம், இரண்டு யானைகளால் இழுக்கப்படும் ஒரு தேர் போன்ற அமைப்பில் அமைந்துள்ளது. தூண்கள் வரிசை வரிசையாகவும், எங்கிருந்து பார்க்கினும் ஒரே வரிசையாகத் தோற்றமளிக்கும் வகையிலும் அமைந்துள்ளன. மண்டபத்திற்குள் நுழையும் வாசலில் ஆறு சிலைகள் காட்சி தருகின்றன. ஒவ்வொரு சிலையும் உயிருடன் இருப்பது போலவே காட்சியளிக்கின்றது. அவற்றுள் அரியநாத முதலியார் சிலையும், அரிச்சந்திரர் சிலையும் மிக்க எடுப்புடன் காணப்படுகின்றன. குதிரையின் மேல் அமர்ந்திருக்கும் தளவாயின் தோற்றம், அவரது அஞ்சாநெஞ்சம், உழைப்பு, முகப்பொலிவு ஆகிய இவற்றை நமக்கு உணர்த்தும் முறையில் அமைந்துள்ளது. அவர் ஏறிச் செலுத்தும் குதிரை நாற்கால் பாய்ச்சலில் ஓடுவது போலக் காணப்படுகிறது. முதலியார் அதன் கடிவாளங்களை உறுதியாக இழுத்துப் பிடித்த நிலையில் அதன் மீது அமர்ந்துள்ளார். அரிச்சந்திரர் உருவத்திற்குப் பக்கத்தில், இறந்த மைந்தனைக் கைகளில் ஏந்திய வண்ணம் சந்திரமதி நிற்கும் நிலையில்

சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. அச்சந்தர்ப்பத்தில் கணவன் - மனைவி ஆகிய அவர்தம் நிலைக்கேற்ப உடை, நகை முதலியவற்றைக் கற்பனை செய்துள்ளமை, சிற்பியின் கலையறிவை நன்கு விளக்குவதாகும்.

### குறவன்–குறத்தி

இச்சிலைகளுக்குப் பக்கத்தில் உள்ள இரு தூண்களில் குறவன் குறத்தி சிலைகள் காணப்படுகின்றன. குறவனது உடற்கட்டு கம்பீரமானது;



சிற்பம் : குறவன்

மார்பு அகன்றது; பார்வை சிறிது கடுமையாகத்

தோற்றுகிறது. அவன் அணிந்துள்ள அணிவகைகள் பல. அவனுடைய உடலமைப்பும் முகத் தோற்றமும் அவன் நன்ருக உழைத்து வளமாக வாழ்ந்தவன் என்பதை உணர்த்துகின்றன.



சிற்பம் : குறத்தி

குறத்தியின் சிற்பம் சிறந்த வேலைப்பாடுடையது. அவள் நான்கு குழந்தைகளுக்குத் தாய்; ஒரு குழந்தை அவள் கையைப் பற்றிக்கொண்டு நிற்கிறது; மற்ருென்று அவள் முதுகின்மீது இருக்கின்றது; இன்னுென்று கூடைக்குள் இருக்கின்றது; பிறிதொன்று அவள் மார்பில் துணியால் கட்டப்பட்டுத் தொங்கிக்கொண்டிருக்கிறது.

சோமசுந்தரனுர் போன்ற இசைவாணர்கள் இருந்து இசைத் தமிழை வளர்த்துவருகின்றனர்.

## நடனக்கலை

இசையுள்ள இடத்தில் நடனம் வளர்ச்சி பெற்றே தீரும். சங்ககாலத்து விறலி சிறந்த நடனமகள். கூத்தராலும் விறலியராலும் நாடகத் தமிழ் நன்கு வளர்க்கப்பட்டது. நாயன்மார் காலத்திலும் பாடல் பெற்ற கோவில்களிலும், அரசவைகளிலும் விழாக்களிலும் இசையும் நடனமும் நன்கு நடைபெற்றன. சிவபெருமானே மதுரையில் பாண்டியனுக்காகக் கால்மாறி நடனம் ஆடினுர் என்பது திருவிளையாடற் புராணத்தால் தெரிகின்றது. கூத்தப்பிரான், நடராசன் என்னும் பெயர்களைக் கொண்டும், இறைவன் ஆடியதாகக் கூறப்படும் பலவகை நடனங்களைக் கொண்டும் நடனக்கலை இறைவனுக்கு விருப்பமானதென்பதும் சமயத் தொடர்புள்ளது என்பதும் நன்கு தெரிகின்றன அல்லவா? சொக்கேசர் திருமுன்பு உள்ள மண்டபத்தில் இறைவனது ஊர்த்துவ நடனமும், காளியின் நடனமும் மிகச் சிறந்த முறையில் சிற்ப அமைப்பில் காட்டப்பட்டுள்ளன.

## சமயநிலை

பாண்டிய நாட்டில் நீண்ட காலமாகச் சைவமும் வைணவமும் பரவியிருந்தன. சங்ககாலத்தில் சமணமும் பௌத்தமும் பரவின. ஆனைமலை முதலிய இடங்களில் சமண முனிவர்கள் வாழ்ந்து வந்தனர்; சமண தீர்த்தங்கரர் உருவங்களும்,

சமண முனிவர் அமைத்த படுக்கைகளும் அங்குக் காணப்படுகின்றன. கி. பி. ஆறும் ஏழாம் நூற்றுண்டுகளிற் சமயப் பூசல்கள் ஏற்பட்டன. திருஞானசம்பந்தர் சமணர்களை வாதில் வென்று சமணர் செல்வாக்கைக் குறைத்தார். அதன் பின்பு நாட்டில் சைவமும் வைணவமும் சிறப்புற்றன. கி. பி. பதினுன்காம் நூற்றுண்டில் முஸ்லிம்களின் படையெடுப்பு நடைபெற்ற பின்பு, பாண்டிய நாட்டில் இசுலாம் பரவியது; மசூதிகள் கட்டப்பட்டன. ஐரோப்பிய வணிகரது காலத்தில் பாண்டிய நாட்டுக் கரையோர ஊர்களில் கிறித்தவ சமயம் பரவலாயிற்று. எனவே, இன்று வையையாறு பாயப்பெற்ற பேரூர்களிலும் சிற்றூர்களிலும் சைவம், வைணவம், இசுலாம், கிறித்தவம் ஆகிய நான்கு சமயங்களும் நிலவியிருக்கின்றன. இங்ஙனம் பல சமயங்களைச் சேர்ந்தவராயினும் பாண்டிய நாட்டு மக்கள் அனைவரும் தமிழரே ஆதலின், ஒரு தாய் ஈன்ற மக்களைப் போலத் தமிழ் நாட்டுப் பற்றும் தமிழ் மொழிப் பற்றும் கொண்டு மன ஒற்றுமையோடு வாழ்ந்து வருகின்றனர்.

## இன்றைய வையை

அணைப்பட்டியில் நீர் தேக்கப்பட்ட காரணத்தால், மழைக்காலம் தவிர மற்ற மாதங்களில் வையையில் நீர் வருதல் இல்லை. ஆயினும், தாயின் மார்பில் குழந்தை கைவைத்து வருடியவுடன் பால் சுரந்து வருதல் போல, மக்கள் வையை ஆற்று மணலைத் தோண்டியவுடன் நீர் சுரப்புற்று அம் மக்களுக்குப் பயன்படுகிறது. எனவே, பாலைத்

தன் அகத்தே மறைத்துவைத்துக் குழந்தை வேண்டும்போது பால் சுரந்தூட்டும் தாயின் மார்பைப் போல, வையையாறு இருந்துவருகின்றது. வையையாறு குடிமக்களுக்கு அவரவர் வேண்டும் அளவுக் குத் தண்ணீர் உதவிவருகின்றது. '**வையை என்னும் பொய்யாக் குலக்கொடி**' என்று சங்கப் புலவர் வையையாற்றைப் பாராட்டி மகிழ்ந்தமை, இக்காலத்திற்கும் பொருந்துவதே என்று கூறுதல் தவருகாதன்ரோ?